# இஸ்ரவேல்

2



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து**




சகோதரனே, கவலைப்பட வேண்டாம். புறஜாதிகளே, உங்களுடைய நாட்கள் சற்றேறக்குறைய முடிந்து விட்டன. நான் உங்களை கர்த்தருடைய நாமத்தில் எச்சரிக்கட்டும்: நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக புறஜாதி கதவு அடைப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

*செய்தி: மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும், பாகம் - 2, 61-0217, பத்தி எண் 49*

**யூதர்கள் புறஜாதிகளுக்கு செய்தியை கொடுத்தது போல, என்றாவது ஒரு நாளில் புறஜாதி சபையும் யூதர்களுக்கு செய்தியை கொண்டு செல்லும் என்று நான் விசுவாசிக்கிறேன்.**

**எனவே அதுதாமே யூதர்களுக்கு முழுமையாக சென்றடையும் போது, கவனியுங்கள்; புறஜாதி கதவானது மூடப் பட்டு, அது யூதர்களுடையதாயிருக்கும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-21M ஜீவ மார்க்கம்

1. நன்றி, சகோ. பார்டஸ் (Borders). உங்களுக்கு தெரியும், மக்கள் மத்தியில் இருப்பது அது அருமையான சிலாக்கிய மாய் இருக்கிறது. மேலும் முதல் முறை யாக யூத ஜெப வீட்டில் (Synagogue) இருப்பது, அது எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பாக இருக்கிறது. இந்த சுருள்களின் ஒழுங்கு முறைகளையும் எப்படியாக அவை பாதுகாக்கப்படுகிறதென்றும், இன்னும் அநேக காரியங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இங்கு வந்து இந்த தேவாலயத்தில் யூதர்களோடு ஒரு சுகமளிக்கும் ஆராதனையை நடத்து வது ஒரு அருமையான நேரமாயிருக்கும். நன்றி சகோதரனே, மிக்க நன்றி.

நான் எப்பொழுதும் யூத மக்களைக் குறித்து ஒரு உணர்வை பெற்றவனாயிருக் கிறேன். ஒருவேளை இக்காலையில் இங்கு யாரும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களைக் குறித்ததான உணர்வு எனக்கு எப்பொழுதும் உண்டு.

**யூதர்கள் புறஜாதிகளுக்கு செய்தியை கொடுத்தது போல, என்றாவது ஒரு நாளில் புறஜாதி சபையும் யூதர்களுக்கு செய்தியை கொண்டு செல்லும் என்று நான் விசுவா சிக்கிறேன்.**

**எனவே அதுதாமே யூதர்களுக்கு முழுமையாக சென்றடையும் போது, கவனியுங்கள்; புறஜாதி கதவானது மூடப் பட்டு, அது யூதர்களுடையதாயிருக்கும்.**

ஆகவே இப்பொழுது இதுதாமே நேரமாயிருக்கிறது. இப்பொழுது இங்கே உள்ளே இருப்பதில் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

**இந்த புறஜாதிகளுக்கான செய்தியானது முதலில் புறஜாதிகளண்டைக்கு யூதர்கள் தான் கொண்டு வந்ததாகும். புறஜாதிகள் அதை மீண்டும் யூதர்களிடம் எடுத்துச் செல்வார்கள்; எடுத்துக் கொள்ளப்படுதல் அப்பொழுது வரும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1204M - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்

300 சகரியா, சகரியா, இப்பொழுது சகரியா 12-ம் அதிகாரம். நாம் இப்பொழுது இதை உண்மையாகவே ஜெபத்தோடு எடுத்துப் பார்க்க விரும்புகிறோம். நான் தேவனுடைய மகிமைக்காக இதை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது சகரியா 12-ம் அதிகாரம் 9-ம் வசனத்தை எடுப்போம். சகரியா 12-ம் அதிகாரம் நாம் 9-ம் வசனத்திலிருந்து துவங்குவோம். இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள். இங்கே வருகையைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார். சகரியா 12, நாம் 9-வது, 9-வது வசனத்தில் துவங்குவோம்.

சகரியா கிறிஸ்துவின் வருகைக்கு 487 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் தீர்க்க தரிசனத்தை உரைக்கிறான்.

*அந்நாளிலே எருசலேமுக்கு விரோத மாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்.* (அதைக் குறித்து எண்ணிப் பாருங்கள்.)

*நான் தாவீதின் குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவி யையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர் கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து,...*

301 இப்பொழுது, எப்பொழுது சுவிசேஷமானது யூதர்களுக்குத் திரும்பிச் செல்கின்றது?

புறஜாதிகளின் காலம் முடிவடைந்த பிறகு, சுவிசேஷம் யூதருக்கு செல்ல ஆயத்தமாயிருக்கும்.

ஓ, இங்கே இந்த நாளில் தானே, நடைபெறப் போகிற ஒரு காரியத்தை நான் உங்களுக்கு முன்னுரைக்க முடிந்தால் நலமாயிருக்கும், பாருங்கள், உங்களுக்குப் புரிகிறதா? அது நடைபெற இருக்கிறது. நாம் அதை சபைக் காலத்தில் பார்ப்போம். சம்பவிக்க ஆயத்தமாயிருக்கிற இந்த மகத்தான காரியம், வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்திலுள்ள அவ்விரு தீர்க்கதரிசிகளாகிய எலியா, மோசே ஆகியோரை யூதர்களுக்காக திரும்பக் கொண்டு வருகிறது. நாம் அதற் காக ஆயத்தமாயிருக்கிறோம். எல்லாமே கிரமமாக ஆயத்தமாக இருக்கிறது.

**இந்த புறஜாதிகளுக்கான செய்தியானது முதலில் புறஜாதிகளண்டைக்கு யூதர்கள்**

**தான் கொண்டு வந்ததாகும். புறஜாதிகள் அதை மீண்டும் யூதர்களிடம் எடுத்துச் செல்வார்கள்; எடுத்துக் கொள்ளப்படுதல் அப்பொழுது வரும்.**

302 இப்பொழுது உபத்திரவ காலத் திற்கு பிறகு உள்ள...இந்த வருகையைப் பற்றி மனதில் வையுங்கள். உபத்திரவ காலத்திற்குள் சபையானது போவதில்லை. நாம் அதை அறிவோம். வேதம் அவ் வாறே கூறுகிறது. புரிகிறதா? சரி.

303 இப்பொழுது, இஸ்ரவேல் வீட்டார் மேல் அவர் ஊற்றுவார், (எதை?) அதே பரிசுத்த ஆவியைத் தான் ஊற்றுவார். பாருங்கள், புறஜாதி சபை சென்றுவிட்ட பிறகே.

*...அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப்*

*புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளியக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.*

*அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிமோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும்.*

*தேசம் புலம்பிக்கொண்டிருக்கும்; ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும்,...நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்; அவர்கள் நோக்கிப் பார்க்கையில் என்ன சம்பவிக்கும்? அவருடைய இரண்டாம் பிரசன்னமாகுதலில் மகிமையின் மேகங்களுடன் அவர் வரும்போது, என்ன சம்பவிக்கும்?*

304 அவரைக் குத்தின அந்த யூதர்கள்...உங்களுக்குத் தெரியும், இன்னொரு

வேத வாக்கியத்தில் அவர்கள் அவரிடத்தில், அவர் இந்த வடுக்களை எங்கே பெற்றுக் கொண்டார் என்று கேட்டார்கள் என்று கூறுகிறது.

அவரோ "என் சிநேகிதரின் வீட்டில்" என்று கூறுவார்.

305 அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ளாத யூதருக்கு மட்டும் அது ஒரு புலம்பலின் வேளையாக இருக்காது. இந்த நாளுக்கென உள்ள மேசியாவாக அவரை ஏற்றுக் கொள்ளாமல், கைவிடப்பட்ட புறஜாதியாருக்கும் அது ஒரு புலம்பும் வேளையாயிருக்கும். அவர்கள் அழுது புலம்புவார்கள். உறங்கும் கன்னிகைகள் புலம்புவர். அதுவே தன்னுடைய தீவட்டிக்கு எண்ணெய்யைப் பெற்றுக் கொள்ள மறுத்த சபையாகும். அங்கே பத்து கன்னிகைகள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அனைவருமே நல்ல ஜனங்கள் தான்,

ஆனால் அவர்களில் ஐந்து பேருக்கு மட்டுமே தங்கள் விளக்குகளில் எண்ணெய் இருந்தது. நல்ல ஜனங்களாய், நல்லவர்களாயிருந்த மற்ற ஐந்து பேர்களும், தங்கள் விளக்குகளில் எண்ணெயைப் பெற்றுக் கொள்ளத் தவறிவிட்டார்கள். “அவர்கள் புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள்; அங்கே அவர்களுக்கு அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.”

306 இங்கோ அது, “அவர்கள் அழுது புலம்புவார்கள்” என்று சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம், “அவர்கள் இருதயம் நொறுங்குண்டு அழுது புலம்புவார்கள்” என்று இங்கே கூறியுள்ளது.

## 60-1204M – இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்

Rev. William Marrion Branham

**தேவன் யூதர்களுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, எந்த புறஜாதி தீர்க்கதரிசியும் அப்பொழுது தோன்றவில்லை, அவ்வாறே தேவன் புறஜாதிகளுடன் தொடர்பு கொள்ளும்போது, யூத தீர்க்கதரிசிகள் வருவதில்லை, தேவன் மறுபடியுமாக யூதர்களிடம் திரும்பும்போது, புறஜாதி தீர்க்கதரிசிகள் இருக்கமாட்டார்கள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

206. **சகோதரன் பிரான்ஹாமே, எலியா ஏற்கனவே இருமுறை வர வேண்டுமென்று அறிகிறேன். அவன் ஏற்கனவே இரு முறை வந்து விட்டானென்றும், அவன் மறுபடியும் வருவானென்றும் நீர் கூறுகின்றீர். அந்த எலியாவின் ஆவியைத் தன்மீது கொண் டுள்ளவன், இரண்டு பேர்களாகிய மோசே, எலியா என்பவர்களில் ஒருவனாக இருப் பானா?**

335 இல்லை. இல்லை. அவன் புறஜாதி சபைக்கு அனுப்பப்படும் புறஜாதியாயிருப் பான், பாருங்கள், தேவன் தம்முடைய சொந்த ஜனங்களிடமே எப்பொழுதும் அனுப்புகிறார், பாருங்கள். “அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்

கொள்ளவில்லை.” அவர் எப்பொழுதும் அந்நேரத்தின் செய்தியையே அனுப்புகி றார்.

336 தேவன் யூதர்களுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, எந்த புறஜாதி தீர்க்க தரிசியும் அப்பொழுது தோன்றவில்லை, அவ்வாறே தேவன் புறஜாதிகளுடன் தொடர்பு கொள்ளும்போது, யூத தீர்க்க தரிசிகள் வருவதில்லை, தேவன் மறுபடியு மாக யூதர்களிடம் திரும்பும்போது, புறஜாதி தீர்க்கதரிசிகள் இருக்கமாட்டார் கள். பாருங்கள்? நான் கூறுவது புரிகின் றதா? சரி.

## 63-0324M - முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

Rev. William Marrion Branham

# யூதர்களுக்கு பிரசங்கிக்க வரும் எலியா, உலகத்தில் வாழ்ந்த அந்த உண்மையான மனிதனா, அல்லது எலியாவின் ஆவி மற்றொரு மனிதனுக்குள் வருவதா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

182. **யூதர்களுக்கு பிரசங்கிக்க வரும் எலியா, உலகத்தில் வாழ்ந்த அந்த உண்மை யான மனிதனா, அல்லது எலியாவின் ஆவி மற்றொரு மனிதனுக்குள் வருவதா?**

இப்பொழுது அதைக் குறித்து...நான்—நான் இதைக்கூற பயப்படுகிறேன். இது எனக்கு தெரியாது. பாருங்கள்? நான் மறுபடியும் அதை படிக்கட்டும்.

**யூதர்களுக்கு பிரசங்கிக்க வரும் எலியா** (ஓ, ஆமாம்.) **உலகத்தில் வாழ்ந்த அந்த உண்மையான மனிதனா, அல்லது எலியாவின் ஆவியை பெற்றிருக்கும் வேறொருவனா?**

148 இதற்கு நான் சரியாக. பதில் கூறுவேனானால், ஏனோக்கைக் குறித்து கூற முடியும். பாருங்கள், ஆனால் நான்—நான் அதைச் செய்ய முடியாது. பாருங்கள். அது என்னவாயிருக்கும் என்று வேதம்

என்ன கூறுகிறதோ அந்த ஒரு காரியத்தை மாத்திரமே நான் அறிந்துள்ளேன்.... இப்பொழுது நான் அதை இவ்விதம் கூறட்டும். ஒலிநாடாவை கேட்கும் சகோ தரர்கள் இதைப் புரிந்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அது அந்த ஆவியி னால் அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதன் என்று நான் விசுவாசிக்க முற்படுகிறேன். ஏனென்றால் எலிசாவின் மேல் எலியாவின் ஆவி அமர்ந்ததாக கூறவில்லையா? பாருங்கள், "எலியாவின் ஆவி" செய்தது போலவே அவனும் செய்தான். பாருங் கள்? ஆனால் இதுதான் உண்மையென்று நான் கூற முடியாது. எனக்குத்—எனக்குத் தெரியாது. பாருங்கள், நான் உங்களோடு உத்தமமாய் இருக்கிறேன். எனக்குத் தெரியாது.

## 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

# சகோதரன் பிரான்ஹாமே, தேவபக்தியுள்ள அனைவரும் எடுத்துக் கொள்ளப்படுதலில் சென்று விட்டால், எலியாவும் மோசேயும் எங்கிருந்து வருவார்கள்? அவர்கள் யூதர்களாயிருப்பார்களா? அல்லது எங்களுக்கு அளிக்கப்பட்ட எலியா அவர்களுடன் கூட இருப்பாரா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

197. **சகோதரன் பிரான்ஹாமே, தேவ பக்தியுள்ள அனைவரும் எடுத்துக் கொள்ளப் படுதலில் சென்று விட்டால், எலியாவும் மோசேயும் எங்கிருந்து வருவார்கள்? அவர் கள் யூதர்களாயிருப்பார்களா? அல்லது எங்க ளுக்கு அளிக்கப்பட்ட எலியா அவர்களுடன் கூட இருப்பாரா?**

282 இல்லை, புறஜாதிகளை அழைப் பதற்கென இருந்த ஆவியினால் அபிஷே கம் பண்ணப்பட்ட புறஜாதி மனிதன் எடுக்கப்படுவார். ஏனெனில், நீங்கள் பாருங்கள், முழு சபையும்—எல்லாருமே எடுத்துக்கொள்ளப்படுகின்றனர். 11-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள இவ்

விரண்டு தீர்க்கதரிசிகளும் அப்பொழுது கீழே கொண்டு வரப்படுகின்றனர். புறஜாதி யாருக்கு கிருபையின் காலம் முடிவடைந்து, அது யூதர்களுக்கு அனுப் பப்படுகின்றது. இல்லை, இவ்விருவரும் ஒரே மனிதன் அல்ல என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். இது என்னுடைய அறிவுக்கு எட்டினவரை கூறப்பட பதில் என்பதை நினைவு கூருங்கள்.

## 63-0324M - முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

Rev. William Marrion Branham

# இப்பொழுது மோசேயும்—எலியாவும் பூமியில் இருக்கின்றனரா? இப்பொழுது மோசேயும்–எலியாவும் பூமியில் இருக்கின்றனரா? அவர்கள் அமெரிக்காவில் உள்ளனரா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-0830M – கேள்விகளும் பதில்களும் #3

336. **இப்பொழுது மோசேயும்—எலியாவும் பூமியில் இருக்கின்றனரா? இப்பொழுது மோசேயும்-எலியாவும் பூமியில் இருக்கின்றனரா? அவர்கள் அமெரிக்காவில் உள்ளனரா?**

134 இல்லை! புரிகிறதா? இல்லை, அவர்கள் இங்கில்லை; சபை எடுத்துக் கொள்ளப்படும் வரைக்கும் அவர்கள் இங்கிருக்கமாட்டார்கள், அப்பொழுது மோசேயும் எலியாவும்...அதை எத்தனை பேர் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்? சரி. நாம் பார்ப்போமாக. இதில் அவர்கள் எந்த பெயரையும் கையொப்பமிடவில்லை, எனவே...சரி. இந்த கேள்விகளை யார் கேட்டிருந்தாலும்...ஏழு கேள்விகள் உள்ளதென்று நான் நினைக்கிறேன்; நான் ஏழு என்று...குறித்திருக்கிறேன். சரி.

இப்பொழுது அவர்கள் ஏற்கனவே தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து விட்டார்கள். அவர்கள் ஏற்கனவே ஒரு தேசமாக ஆகி, தங்கள் சொந்த நாணயத்தையும், சொந்தக் கொடியையும் உடையவர்களாக இருக்கின்றனர். அத்தேசம் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவள் தன் நாட்டில் குடியேறிவிட்டாள். அவள் ஆயத்தமாக இருக்கிறாள். இப்பொழுது எதற்காக ஆயத்தமாயிருக்கின்றனர்? அவர்களிலுள்ள இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் ஆகிய இஸ்ரவேலர் முத்திரையிடப்படுவதற்காகவே.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-12-11 M பத்து கன்னிகைகள்

91. 1914ம் ஆண்டில் முழு உலகமும் ஜெர்மனியை நோக்கி ஒரு உலக யுத்தத் திற்காக அணி வகுத்துச் சென்றது. ஆம், முழு உலகமும் ஒரு உலக யுத்தத்திற்காக புறப்பட்டன. அங்கே ஒரு வினோதமான காரியம் நடந்ததை நீங்கள் கவனித்தீர் களா?

92. எனது நல்நண்பராகிய இங்கே அமர்ந்திருக்கிற சகோ. வுட் அவர்களின் தந்தையே, நீங்கள் இதை தெளிவாக புரிந்து கொள்ள விரும்புகிறேன். பாருங் கள், அவர்கள்... அவர் யேகோவா சாட்சி களிலிருந்து மனந்திரும்பியவர் ஆவார்.

93. ஆகவே, அவர்கள் யாவரும் யுத்தத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். அது

1914ம் ஆண்டு என்று நன்கு நினைவி லிருக்கும். அவர்களுக்கு இது நாள் வரை யிலும், யார் அந்த யுத்தத்தை நிறுத்தியது என்பது தெரியாது என்பது வினோதமாக இல்லையா? ("உலக யுத்தத்தின் வீழ்ச்சி" என்ற புத்தகத்தின் இரண்டாவது வால் யூமில், 44ம் பக்கத்தில் அதைப் பற்றி படிக்கலாம். அப்புத்தகத்தின் தொகுதிகள் யாவும் என்னிடம் உள்ளன). கெய்சர்வில் ஹெம், தான் அதற்காக உத்தரவு ஒன்றை யும் பிறப்பிக்கவில்லை என்று கூறினார். ஆனால் திடீரென யுத்தமானது நின்று போனது, ஒருவருக்கும் ஏன் நின்று போனது என்பது தெரியாது. அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீ ரென முன்னணியில் வந்து, அவர்களிடம் கூறினார்கள். "எல்லாம் முடிந்தது, யுத்தம் நின்றது" என்று. அவர்கள் ஏற்கனவே சமாதான உடன்படிக்கையில், என்ன நடக்கிறதென்று அறியாமல் கையொப்பம் இட்டிருந்தனர்.

94. அவைகள் யாவையும் குறித்து பேச வேண்டுமானால், ஒன்றிரண்டு நாட்கள் பிடிக்கக்கூடும். அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் நாம் அதிலுள்ள முக்கியமான பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு பார்ப்போம். தேவன் தன்னுடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்காக, அவரே இதைச் செய்தார். அந்த தூதன் அதை நிறுத்தினான். அத்தூதர்கள் சங்கரிக்கும் ஆயுதங்களை தங்கள் கைகளில் பிடித்துக் கொண்டு சென்றார்கள், ஏன்? முழு உலகையும் அழிப்பதற்காக இன்னொரு தூதன் கூறினார், 'சற்றுப் பொறுங்கள், அதைச் செய்யாதீர்கள், ஏனெனில், நாம் நமது தேவனுடைய ஊழியக்காரருடைய நெற்றிகளில் முத்திரை போட்டாக வேண்டும்'' என்று.

95. சரியாக, பெந்தெகொஸ்தே எழுப்புதல் உண்டான சமயம் அது. 1906ல் அது துவங்கியது. யுத்தம் 1914ல் துவங்கியது.

உங்களில் எத்தனை பேர்கள் அதை அறிவீர்கள்? அந்த பழைய நாட்களை நினைவில் வைத்துள்ள பழங்காலத்து பெந்தெகொஸ்தேக்காரர்கள் யாராகிலும் இங்கே உண்டா? நிச்சயமாக. அக்காலங் களில், பரிசுத்த ஆவியானவர் மக்கள் மேல்விழ ஆரம்பித்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, அந்நிய பாஷைகளில் பேசி, வியாதியஸ்தருக்காக ஜெபித்தார்கள். அதன் துவக்கமாக அக்காலம் இருந்தது. அல்லது இரு காலங்களுக்கும் இடைப்பட்ட காலமாக அது இருந்தது. அவ்வாறு அது பிறந்த பொழுது, உண்மையான சபையானதும் ஏற்பட்டது. அதன்பின்பு, பெந்தெகொஸ் தேயினர் அசெம்ப்ளீ ஸ் ஆஃப் காட், சர்ச் ஆஃப் காட் ஆகிய ஸ்தாபனங்களை உண்டாக்கிக் கொண்டனர். இவ்வாறு அவர்கள் தங்களுடைய ஸ்தாபன கொள் கைகளுக்குள் சென்று, வழி தவறினர். இப் பொழுது இருக்கிறது போலவே அப்பொ

ழுதும் இருந்தனர். எனவே அது... நாம் காலத்தின் கடைசியில் இருக்கிறோம் என்பதை நீங்கள் பாருங்கள். யாவும் முடிவுக்கட்டத்தை நோக்கி இறங்கி வருகிறது, யாவும் சரியாக இந்தக் கடைசிக் கட்டத்திற்குள் ஓடி வருகின்றது.

96. இப்பொழுது, இந்த நான்கு... நீங் கள் கவனித்து பாருங்கள், போர் சரியாக பதினோராம் மாதமாகிய நவம்பரில் 11ம் தேதி, பகல் 11ம் மணி வேளையில் நின்று விட்டது. அது சரியாக வருடத்தில் 11ம் மாதம், மாதத்தில் 11ம் நாள், நாளின் 11ம் மணி வேளையாக இருந்தது. அதைக் குறித்து இயேசு என்ன சொன்னார்? முதலாம் மணி வேளையில் ஒருவன் திராட்சைத் தோட்டத்திற்கு வேலைக்குச் சென்றான். அவனுக்கு 1 பணம் கூலியாக கிடைத்தது. கடைசியாக சிலர் வேலைக்குச் சென்றார்கள். அவர்கள்தான் பதினோராம் மணி வேளையில் சென்றவர்கள். அது

சரியாக இருக்கிறதல்லவா? அங்கே அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பதினோராம் மணி வேளையில் உள்ளவர் கள். அவர்கள் பிந்தினோர் ஆவர். இப்பொ ழுது அவர்கள் வருவதற்கு உரிய வேளை யாகிவிட்டது. அவர்கள் யூதர்கள் மத்தியி லிருந்து உள்ளவர்கள். இப்பொழுது ஒன்று சேர்ந்து ஒரு தேசமாக உருவாகிவிட்டார் கள். அவர்கள் உலகம் முழுவதிலும், ஈரான் முதற்கொண்டு பல்வேறு தேசங்களி லும் சிதறடிக்கப் பட்டுவிட்டார்கள். அங்கே அவர்கள் இருந்த பொழுது, இயேசு பூமியில் இருந்தார் என்பதனை அறியா திருந்தார்கள்; ஒரு புதிய ஏற்பாடு உண்டு என்பதையோ, அல்லது வேறு எதையுமோ அறியாதிருந்தார்கள்.

97. இப்பொழுது நீங்கள் லைஃப் என்ற பத்திரிக்கையில் அவர்கள் தங்கள் சுய தேசத்திற்குத் திரும்பி வந்துகொண்டிருப் பதைக் குறித்த படங்கள் பிரசுரித்துள்

ளதைப் பார்க்கலாம். 'அத்தி மரம் துளிர் விடுவதை நீங்கள் காணும்போது'' என்று இயேசு கூற வில்லையா? யூதர்கள் எப்பொழுதும் அத்திமரத்தினால் உவமை யாக சொல்லப் படுகிறார்கள். 'இவைக ளெல்லாம் சம்பவிக்கு முன்னே, இந்த சந்ததி ஒழிந்து போகாது'' என்று இயேசு கூறினார். இப்பொழுது அவர்கள் ஏற்கனவே தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து விட்டார்கள். அவர்கள் ஏற்கனவே ஒரு தேசமாக ஆகி, தங்கள் சொந்த நாணயத்தையும், சொந்தக் கொடியையும் உடையவர்களாக இருக்கின்றனர். அத் தேசம் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவள் தன் நாட்டில் குடியேறிவிட்டாள். அவள் ஆயத்தமாக இருக்கிறாள். இப்பொழுது எதற்காக ஆயத்தமாயிருக்கின்றனர்? அவர் களிலுள்ள இலட்சத்து நாற்பத்து நாலா யிரம் பேர்கள் ஆகிய இஸ்ரவேலர் முத்திரையிடப்படுவதற்காகவே. இன்னும்

ஒரு நிமிடத்தில் நாம் அதைப் பற்றிப் பார்ப்போம். நான் உண்மையான யூதர் களைப் பற்றி தான் இங்கே குறிப்பிடு கின்றேன். அவர்கள் யூதர்கள், வால் ஸ்ட்ரீட்டிலுள்ள எப்பொழுதும் ஏமாற்றி திருடும் கூட்டமாகிய யூதர்களை நான் குறிப்பிடவில்லை. அங்கே தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளும் மிகவும் உண்மையான யூதர்களைப் பற்றித் தான் நான் குறிப்பிடுகிறேன். (அமெரிக்காவில் நியூயார்க் நகரிலுள்ள வால் ஸ்ட்ரீட் என்ற இடம் தான் அமெரிக்காவின் பங்குச் சந்தையாகும். உலகின் பெரிய பங்குச் சந்தையுங்கூட. இங்கு யூதர்கள் ஆகிய வர்த்தகளின் ஆதிக்கம் தான் அதிகம் - மொழிபெயர்ப்பாளர்).

98. இப்பொழுது உண்மையான யூதர்கள் மீண்டும் பாலஸ்தீனாவில் கூடி வந்து கொண்டு இருக்கிறார்கள். தீர்க்கதரிசி என்ன உரைத்தானோ, அதே விதமாக,

இஸ்மவேலும், ஈசாக்கும் ஒருவர் கழுத்தை ஒருவர் நெறிக்கும்படியான அளவுக்கு அருகருகில் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டவர்களாக இருந்து கொண்டிருக் கிறார்கள். கடைசிநாட்களில் இவ்வாறு அவர்கள் அங்கே இருப்பார்கள் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளபடி, அவர்கள் அவ்வாறே அங்கே வாசம் பண்ணுகி றார்கள். இஸ்மவேல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாசம் பண்ணுகிறானென்றால், ஈசாக்கு அதற்கடுத்த தெருவில் இருக்கிற அளவுக்கு மிகவும் அருகருகே அவர்கள் வாசம் பண்ணுகிறார்கள். முகம்மதியர் களும், யூதர்களுமான அவர்கள், ஒருவருக் கொருவர் எவருக்கும் சொந்தமில்லாத இடத்திற்காக சண்டையிட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

99. இப்பொழுது, நாம் பெற்றிருக்கிற இந்த செய்தியோடு அந்தக் காரியம் தொடர்புடையதாக இருக்கிறதா

இல்லையா என்பதைப் பற்றிப் பார்ப் போம். இஸ்ரவேல் என்ற ஒரு நாடு ஏற்படுவதைப் பற்றி கைச்சாற்றிடப்படும் அதே வேளையில், அதே மணி நேரத்தில், அதே நாளில், அதே மாதத்தில் நான் இந்தியானாவிலுள்ள க்ரீன் மில் என்னு மிடத்தில் இருந்தேன். அப்பொழுது அந்த தூதன் அங்கே எனக்கு தரிசனமாகி, இந்த செய்தியோடு என்னை ஊழியக்களத்திற்கு அனுப்பினார். அங்கே அவர் அந்த நதிக்கரையில் என்னை சந்தித்து என்ன நடக்கும் என்று கூறியபிறகு, அதற்கு பதினோரு ஆண்டுகள் கழித்து, இஸ்ரவேல் தேசமாக உருவாவதற்கான தீர்மானம் கைச்சாற்றிடப்பட்ட அதே நேரத்தில் அவர் எனக்கு தமது உத்தரவைக் கொடுத்தார். அது யாவும் ஒன்றோடொன்று சம்மந்தப் பட்டுள்ளது.

“இப்பொழுது இஸ்ரவேலுக்குப் போகாதே, வேளையானது இன்னும் வரவில்லை” என்று அவர் கூறினார்.




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-12-11 M பத்து கன்னிகைகள்

127. இப்பொழுது, அங்கே உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேராகிய இஸ்ரவேலர் கர்த்தருடைய வருகைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். புறஜாதிகளின் நிறைவு உண்டாகிற வரையிலும் அவர்கள் உள்ளே போக முடியாது. புறஜாதிகள் காலம் முடிவடைந்தாக வேண்டும்.

128. இப்பொழுது நான் ஒரு சிறிய என் சொந்த விஷயத்தை குறிப்பிடுவேன், அதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். ஸ்வீடனின் தலைநகராம் ஸ்டாக்ஹோமில் உள்ள பிலதெல்பியா சபைகளின் பொதுக் கண்காணிப்பாளர் லேவி பெத்ரஸ் என்பவர் இந்த யூதர்

களுக்கு பத்து இலட்சம் பைபிள்களை, அதாவது சிறிய அளவில் உள்ள புதிய ஏற்பாடு புத்தகங்களை அனுப்பிக் கொடுத் தார். அதில் ஒரு பிரதி அவரிடமிருந்து எனக்கு ஒரு ஞாபகச் சின்னமாக அனுப்பப் பட்டிருந்தது. அவர்களுடைய மொழி யானது எப்படிப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். யூதர்கள் பின்னால் இருந்து முன்னாக வாசித்துக் கொண்டு வரு கிறவர்கள். அவர்கள் பாஷை அப்படி. அவர்கள் இப்புத்தகங்களை வாசித்து, ''நல்லது, இந்த இயேசு தான் மேசியா வெனில், அவர் மரித்து, அவரது ஆவி யானது ஆவியின் ரூபத்தில் வந்திருக்கிறது எனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையா ளத்தைச் செய்து காண்பிப்பதை நாங்கள் பார்க்கட்டும், அப்பொழுது நாங்கள் அவரை விசுவாசிப்போம்'' என்று கூறினார் களாம்.

129. என்னே ஒரு பரிபூரணமான அமைப்பு இது! நான், 'ஆண்டவரே, இதோ இப்பொழுதே வேளை வந்திருகிறது. இது தான் சமயம், இங்கே அது வந்திருக்கிறது'' என்றேன். எனவே, நானும், பில்லியும், லாய்ஸும் விமானத்தில் பயணமானோம்.

130. நான் இந்தியாவுக்குள் சென்றேன், அங்கிருந்து நான் திரும்பப் பிரயாண மாகையில், ''அங்கே இறங்கி யூதர்களுக்கு செய்தியைப் பிரசங்கிப்பேன். 'இதோ இங்கே சத்தியம் இருக்கிறது' என்று அவர் களுக்கு எடுத்துக் காண்பிப்பேன்' என்று கூறினேன்.

131. யூதர்கள் எப்பொழுதும் தங்க ளுடைய தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பவர் கள். நாம் யாவரும் அதை அறிவோம். ஏனெனில் மேசியா ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று தேவன் அவர்களுக்கு உரைத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய

தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறார்கள். ''உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியா யிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி'' என்று தேவன் கூறினார். ''அந்த தீர்க்கதரிசி சொல்லும் காரியம் நிறைவேறினால், அப்பொழுது அவனுக்கு செவி கொடுக்க வேண்டும், ஏனெனில் நான் அவனோ டிருக்கிறேன். ஆனால் அவன் கூறிய வார்த்தை நிறைவேறாமற் போனால், அந்த தீர்க்கதரிசியை நம்ப வேண்டாம். ஏனெனில் நான் அவனோடு இருக்க வில்லை. ஆனால் அவன் கூறியது நிறைவேறினால், அப்பொழுது அவனுக்கு செவி கொடுங்கள். ஏனெனில் நானே அவனோடிருக்கிறேன்'' என்று கூறியுள் ளார். யூதர்கள் அதை அறிவார்கள்.

132. ''ஓ என்னே! அது அற்புதமான தாய் இருக்காதா? நான் அவர்களில்

நான்காயிரம் அல்லது ஐந்தாயிரம் பேர் களை வரவழைத்து, அங்கே நிற்கச் செய்திடுவேன், அவர்கள் வேதாகமத்தை வாசிக்கிறவர்களாக இருக்க வேண்டாம். 'இது மேசியாவானால், அவர் தீர்க்கதரிசி யின் அடையாளத்தை செய்து காண்பிக் கட்டும்' என்று எனக்குள் எண்ணினேன். எனது கையில் டிக்கெட் ஆயத்தமாக இருந்தது. அராபிய விமானக் கம்பெனி யின் விமானத்தில் பயணம் செய்வதற்கு பயணம் செய்பவர்களை விமானத்திற்கு வரும்படி அழைத்து முடிக்க இன்னும் முப்பது நிமிடங்கள் இருந்தன. எனவே நான் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நின்றிருந்தேன். அப்பொழுது நான் எனக்குள், ஓ தேவனுக்கு ஸ்தோத்திரம், இன்னும் இரண்டு மணி நேரம். அப்பொழுது யூதர்கள் முழு நிச்சயத் தோடே பெந்தெகொஸ்தேயில் அவர்கள் பெற்றுக் கொண்டதைப் போல் இவர்களும்

பெற்றுக் கொண்டதைப் போல் இவர்களும் பெற்றக் கொள்ளப் போகிறார்கள்'' என்று எண்ணினேன்: மேலும், நான் எனக்குள், “நீங்கள் போய் ஒரு கூட்டம் ஜனங்களை அழைத்து வந்து, அவர் இன்னமும் மேசியா தானோ என்பதை காணும்படி செய்யுங்கள் என்பேன்'' என்று எண்ணி னேன். “உங்களுடைய முற்பிதாக்கள் எந்த அடிப்டையில் இந்த மேசியாவை புறக்கணித்தார்களோ, அதே அடிப்படை யில் நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளுங் கள். உங்கள் கரங்களை உயர்த்திடுங்கள்; இப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வீர்கள்'' என்று சொல்லு வேன் என்று நினைத்தேன். அப்பொழுது உலகில் அவர்கள் உள்ள பகுதியில் போய் அவர்கள் சுவிசேஷத்தை பரவச் செய்வார் கள். இந்த செய்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பொழுது, தலைவர்களைப் பிடியுங்கள். அவர்களின் நாடித் துடிப்பாய்

இருக்கின்ற தலைவர்களைத் தொடுங்கள். அவர்கள் இதை துவக்கட்டும்'' என்று சொல்லுவேன் என்று நான் மேலும் நினைத்தேன்.

133. அப்பொழுது எனக்குள் ஏதோ ஒன்று, “இப்பொழுது போகாதே, வேளை யானது இன்னமும் வரவில்லை'' என்று கூறியது. பார்த்தீர்களா, புறஜாதிகளின் நாளானது இன்னமும் முடிவடைய வில்லை, பாருங்கள்.

''ஓ, இது என்னுடைய எண்ணம்தான்'' என்று அப்பொழுது தான் சிந்தித்தேன்.

134. நான் மீண்டும் புறப்பட்டேன், அப்பொழுது, என்னால் தாங்க முடியாத அளவுக்கு எனக்குள் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது. நான் விமானம் நிறுத்தி வைக்கும் ஷெட்டின் பின்பக்கமாகச் சென்று தலை வணங்கி, “பிதாவே, நீர் தான்

என்னோடு பேசிக் கொண்டிருக்கிறீரா?'' என்று ஜெபித்தேன்.

135. "இப்பொழுது இஸ்ரவேலுக்குப் போகாதே, வேளையானது இன்னும் வரவில்லை'' என்று அவர் கூறினார். உடனே நான் உள்ளே போய், எனது டிக்கெட்டை மாற்றிக் கொண்டு, வேறு வழியாக போக பாதையை மாற்றினேன். வேளையானது இன்னமும் வரவில்லை என்பதை பாருங்கள்.

136. ஆனால் இந்நாட்களில் ஒன்றில் செய்தியானது இஸ்ரவேலுக்குப் போகும். தேவன் அவர்களிடமாக மோசேயையும் எலியாவையும், வெளிப்படுத்தின விசே ஷம் 11ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி அனுப்பிடுவார். அவர்கள் அற்புத அடை யாளங்களைச் செய்து காட்டுவார்கள்; அது யேகோவாவின் அடையாளமாகும். அப்பொழுது புறஜாதிகளின் காலமானது

முடிவடைந்திருக்கும். புறஜாதி சபையை விட்டு கிருபையானது அகன்று விட்டிருக் கும்; பெந்தெகொஸ்தே யுகமானது முடிவடைந்திருக்கும். ஸ்தாபனங்கள் தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கும். ஏனெனில் அவர்கள் உறங்கும் கன்னிய ரோடு எழும்பி வருகிறார்கள்; நாம் சிறிது நேரத்திற்குள் அந்த விஷயத்திற்குள் செல்லுவோம். ஆனால் அவர்கள் அந்த பிரிவில் தான் வருவார்கள்.

137. ஆனால் அவர்கள் அதைச் செய்யும்பொழுது, யூதர்கள் பரிசுத்த ஆவி யின் அபிஷேகத்தைப் பெறுவார்கள்; அவர்களுக்கு ஒரு எழுப்புதலுண்டாகி, அது மழை பெய்யாது வானத்தை அடைக் கும் காரியத்தைச் செய்யும். அவர்கள் எல்லாவிதமான அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இறுதி யாக ரோமானிய குருக்களாட்சியானது...

கத்தோலிக்க சபையானது யூதர்களோடு செய்து கொண்டிருந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டு விடுவார்கள். அப்பொ ழுது அங்கே... அவர்கள் தங்களுக் கிடையே செய்து கொண்ட ஒப்பந்த மானது... அவர் அங்கே செல்லுவார். தேவன் ஆதி நாட்களில் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தது போல, நின்று அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். அவர்கள் முடிவில், அந்த இரு தீர்க்கதரிசி களையும் கொன்று விடுவார்கள். அவர்கள் தெருவில் கிடப்பார்கள். அவர்கள்மேல் துப்புவார்கள்.

138. சில வாரங்களுக்கு முன்பாக, அங்கே அந்த பெந்தெகொஸ்தே ஊழியக் காரரையும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளையும் கொன்று போட்டது போல் நடக்கும். அப்பிள்ளைகளின் சிறிய வயிறு மிகவும் பெரிதாக உப்பிப்

போயிற்று. மக்கள் அப்பிரேதங்களின் பக்கமாக நடந்து சென்று, அவர்கள் மேல் துப்பி, அவர்களது உடல்கள் அடக்கம் பண்ணப்படாமல், அப்படியே மூன்று அல்லது நான்கு நாளாக வெயிலில் கிடந்தன.

139. அதே காரியத்தையே அவர்கள் செய்வார்கள். வேதம் அவ்வாறு கூறுகிறது. அங்கே சரியாக இதே காரியத்தை அவர்கள் செய்வார்கள். அவர்கள் அவர்களைக் கொலை செய்யும்பொழுது, மூன்று நாட்கள் அவர்கள் பிரேதங்கள் வீதிகளில் கிடக்கும் பொழுது, ஜீவ ஆவி இரு தீர்க்கதரிசிகளுக்குள் பிரவேசித்து அவர்கள் எழுந்து நின்று, மகிமைக்குள் ஏறிச்செல் வார்கள். பிறகு, ஏறக்குறைய அதே வேளையில் தான் வெடி வெடிக்க ஆரம்பிக்கிறது. அதுதான் கடைசிநேரம்.

அப்பொழுதுதான் அவள் முடிந்து போவாள்.

140. ஆனால் அது சம்பவிப்பதற்கு முன்பாக, புறஜாதிகள், தெரிந்துகொள்ளப் பட்ட மணவாட்டி... அங்கே உங்களில் சிலர், இக்காலையில் ஒன்றில் மேசை யருகே அமர்ந்திருப்பீர்கள். அதில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார், இன்னொரு வர் கைவிடப்படுவார். முடிவாக நீங்கள் அதிசயப்படுவீர்கள், 'இது என்ன விஷயம்'' என்று. ஒரு மோட்டார் வாக னத்தை உங்கள் மனைவியோடோ அல்லது உங்கள் கணவனோடோ பேசிக்கொண்டே ஒட்டிக் கொண்டே சென்று கொண்டிருக்கக் கூடும், நீங்கள் கேட்பதற்கு அவர்கள் பதிலளிக்க மாட்டார்கள், ஏனெனில் அவர் கள் திடீரென அங்கு இருக்க மாட்டார்கள். கல்லறைக்கு ஓடிச்செல்வீர்கள், சில கல்லறைகள் திறந்திருக்கும், வேறு சில

இன்னமும் அப்படி மூடியே கிடக்கும். “மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடைய வில்லை''. அப்படியே ஞாபகத்தில் வைத் துக்கொள்ளுங்கள். அது அப்பொழுது முடிவடைந்திருக்கும்.

141. அது ஒரு இரகசிய வருகையாக இருக்கும், அது எப்பொழுது சம்பவிக்கப் போகிறது என்பதை ஒருவரும் அறிய மாட்டார்கள். நாம் ஆயத்தமாகவும் விழிப்புடனும் இருக்கும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறாம். எந்த மணிவேளை என்பதை நாம் அறியோம். ஆனால் அது என்னவாயிருந்தாலும் சரி, கடந்த காலத் தில் மரித்தவர்களுக்கு நாம் முந்திக் கொள் வதில்லை. இயேசு தோன்றியதுமே, முழு ஜாமமும் விழித்தெழுகிறது. மரித்தவர் களோ, உயிரோடிருக்கிறவர்களோ, யாரா யிருந்தாலும் சரி.

142. முதலில், நாம் அவரை சந்திப்ப தில்லை. நாம் ஒருவரையொருவர் முதலில் சந்திப்போம். வேதம் கூறுகிறது எபேசியர் 5ம் அதிகாரம் - "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை யடைந்த வர்களுக்கு முந்திக்கொள்வ தில்லை''. தங்களுடைய சாட்சிகளை தங்களுடய இரத்தத்தினால் முத்திரையிட்ட அந்த விலையேறப் பெற்ற மக்கள். 'நித்திரையடைந்தவர்களை நாம் முந்திக் கொள்வதில்லை. ஏனெனில்... எக்காளம் தொனிக்கும்'' அப்பொழுது ஒன்று சம்ப விக்கும். "சுவிசேஷத்தின் ஏதோ ஒன்று தொனிக்கும்." அது தானே அவருடைய வருகையை அறிவித்தலாகும். "கிறிதுவுக் குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள்.'' பின்பு உயிரோடிருக் கும் காத்திருக்கும் நாமும் மருரூபமடை வோம். ஒரு க்ஷணத்தில் ஒரு இமைப் பொழுதில், நாம் மறுரூபமடைவோம்,

சுருக்கங்கள் மறைந்து போகும். நரை மயிர் நீங்கிவிடும், ஒரு மாற்றம் ஏற்படுவதை நாம் நன்கு உணருவோம். நாம் நின்று கொண்டிருக்கையில், நமக்குப் பிரியமான வர்களை முதலில் நாம் சந்திப்போம். "அதோ அங்கே அம்மா இருக்கிறார்கள், அப்பா இருக்கிறார்கள், அதோ அங்கே என்று பிரிய சிநேகிதன் இருக்கிறான். ஓ, அல்லேலூயா, நாம் ஆயத்தமாக இருக்கி றோம்'' என்று சொல்லுவோம். மரித்து யிர்த்து அவர்களோடுகூட நாம் ஆகாயத் தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த்தரை சந்திப்போம் என்று வேத வாக்கியம் கூறு கிறது. இதுவே வருகையின் ஒழுங்காகும்.

143. ஓ, எனக்கு வயது சென்ற தந்தையை காண்பது எவ்வளவு நன்றா யிருக்கும்! ஓ, என்னே! விசுவாசத்தோடு மண்ணுக்குள் சென்ற நமக்கு மிகவும் பிரியமானவர்களை சந்திப்பது எவ்வளவு

அருமையாயிருக்கும்! தேவனுடைய இனிமையைப் பாருங்கள். அவரை முதலில் நாம் சந்திப்போமானால், “அம்மா அங்கே இருக்கிறார்களா, அம்மா கடைசி யாக அதை அடைந்தார்களா? அவர்க ளுக்கு மிகவும் உறுதியாக பிரசங்கித்தோம், நாம் முயற்சி செய்தோம்; அவர்கள் இங்கு இருக்கிறார்களா? ஜா அங்கிள் இங்கு இருக்கிறார்களா? சகோதரன் இன்னார் இங்கு இருக்கிறாரா?'' என்றெல்லாம் நாம் கேட்போம் என்று அவர் அறிந்தே இருக்கிறார். “கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உம்மை நேசிக்கிறோம், ஆனால்...'' என்று கேட்போம். முதலா வதாக நாம் ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறோம். ஓ, ஓ, ஓ. அவர்கள் அங்கு இருக்கிறார்களா என்று நாம் வியக்கத் தேவையில்லை. நாம் யாவரும் அங்கே இருக்கிறோம்.

144. அவர்கள், 'ஆமென், மகிமையும், ஞானமும், கனமும், வல்லமையும், பெல னும் உண்டாவதாக'' என்று கூறியது ஆச்சரியமல்ல.

145. இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை கழற்றி விட்டு, தரையிலே வணக்கமாய் விழுந்து, அவர்கள் யாவரும் தரையிலே விழுந்து கிடந்து, அவரைத் தொழுது கொண்டனர்.

146. இந்நாட்களில் ஒன்றில் நாம் பூமிக்கு அப்பால், பூமியின் வளையத்திற்கு அப்பால், எங்கோ ஆகாயத்தில் நிற்போம். அப்பொழுது நாம் இன்னமும் பரலோ கத்தில் போய் விடமாட்டோம்; நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

147. ரெபெக்காள் விரைவாக தீர்மா னித்தாள். தான் ஈசாக்கை சந்திக்க எலியேச ருடன் ஒட்டகத்தின் மேலேறி செல்வோம் என்று அவள் தீர்மானித்தபொழுது, தனக்கு

கணவனாக ஆகப்போகிற ஈசாக்கின் முகத்தை அவள் இதற்கு முன் பார்த்த தேயில்லை. ஆயினும் தேவன் அவளை அவனிடம் நடத்திக்கொண்டு இருந்தார். மாலையின் குளிர்ச்சியான வேளையில், ஈசாக்கு வயல்வெளிகளில் போவதற்காக போய்க் கொண்டிருந்தான். அது மாலை வேளையாயிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தின் மேலேறி வந்து கொண்டிருக் கிறாள். எலியேசர் அவளிடம், "இதோ அவர் வருகிறார்'' என்று கூறினான். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தை விட்டிறங்கி, தன் முகத்தின்மேல் இருந்த முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டாள். அவள் இதற்குமுன் அவனைப் பார்த்ததே கிடையாது. அறிந்திருக்கவில்லை... அவன் தான் அவளுடைய கணவன் என்று, அவனை இதற்கு முன் பார்த்ததே கிடை யாது. அவள் அவனை விசுவாசத்தினால்

சந்திக்க போவதாக இருந்தாள். (அவர் எப்படி தோற்றமளிப்பார் என்பதை நான் அறியேன், ஆனால், ஓ, அவரை நான் சந்திக்கும் பொழுது!) அவனை அங்கே வெளிகளில் அவள் சந்தித்த பொழுது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. அவனும் அவளை இதற்கு முன்பு கண்டதில்லை. அவன் கண்டபோது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. இங்கே இவர்கள் ஒருவரையொருவர் வெளி களிலே சந்திக்க வருகிறார்கள். அவன் அவளைத் தன் தந்தையின் இராஜ்யத் தினுள் கொண்டு வந்து அவளை விவாகம் செய்து கொண்டாள்.

148. அதேவிதமாகத்தான், கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே, அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சந்திக்கும். ஓ, அது எப்பேர்ப்பட்ட

உறவாக இருக்கும், கண்டதும் காதலாகத் தான் இருக்கும். நாம் பூமியின் வளையங் களிலே நின்று கொண்டிருக்கும்பொழுது, அந்த மீட்பின் பாடல்களைப் பாடும்போது, அது எப்படியாயிருக்கும்! ஓ, என்னே! எப்படியாய், நாம் நமக்கு அவர் அளித்த நம்மை மீட்கும் கிருபையைக் குறித்து, அவரைப்பாடித் துதிப்போம். பூமியின் வட்டத்தை, தலை வணங்கியவாறு, தூதர்கள் சுற்றி சூழ்ந்து கொண்டிருக் கையில், நாம் என்ன பேசிக்கொண்டிருக் கிறோம் என்பதைப் பற்றி அறியாமலிருப் பார்கள். அத்தூதர்கள் இழக்கப்படவில்லை. இரட்சிக்கப்படுவது என்றால் என்ன என்பதை அத்தூதர்கள் அறிய மாட்டார் கள். நாம் தான் இழக்கப்பட்டோம். நாம் தான் அவ்வாறிருந்தோம். அப்பொழுது, எவ்வளவு பயங்கரமான காரியம் நமக்கு முன்பாக இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம், அவரோ நம்மை

சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலும் இருந்து தம்முடைய இரத்தத்தினாலே மீட்டார். ஓ, அது எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி கொண்டாடுதலான நாளாயிருக்கும்.

149. நான் அப்பாடலை விரும்புகிறேன்.


ஆகாயத்தில் ஆனந்த சந்திப்பொன்றுண்டு. இனிமையாய், இனிமையாய், ஈற்றிலே நான் வான்வெளிக்கப்பால் உள்ள வீட்டிலே உன்னை சந்தித்து வாழ்த்துவேன்.

அழிவுள்ளோர் காதுகளில் கேட்டிராத பேரின்ப கீதம் பாடுவோம். அது மகிமையாயிருக்கும், நான் அறிவிக்கிறேன், தேவனுடைய சொந்தக் குமாரன் நடத்திச் செல்லுவார் ஆகாயத்தில் நாம் அவரை சந்திக்கையில். முட்செடியருகே நின்ற மோசேயையும் வீர தாவீதையும் அவன் கவணையும் சொப்பனம் காணும்

யோசேப்பையும் குறித்து அறிந்துள்ளீர். தானியேலும் சிங்கக் கெபியையும் பற்றி எப்போதும் பாடுகிறோம். ஓ, இன்னும் இவ்விதமான அநேகர் வேதத்திலுண்டு. அவர்கள் யாவரையும் காண நான் வாஞ்சிக்கிறேன் என்று அறிவிக்கிறேன் (அது சரிதான்) அவர்களை சந்திப்பது எவ்வளவாய் ஆனந்தமாயிருக்கும் அது ஆகாயத்தில் சந்திக்கும்போது நடக்கும் (அந்நாளுக்காக காத்திருக்கிறேன்)

150. அதோ அங்கே உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் வருகிறார்கள். அவர்கள் பிறகு சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வார்கள். புறஜாதிகள்மேல் ஒளியானது வீசிக்கொண்டிருக்கையில், அதே வேளையில் அவர்கள் ஏற்றுக்கொள்ள இயலாது. யூதர்கள் அதை மறுதலித்து மறைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, ஒளியானது... புறஜாதி

யார் எடுக்கப்பட்டபிறகு, ஆவியானவர் அவர்களுக்கு சாட்சி கொடுக்கும்படி இருவர்மேல் வருகிறார். அப்பொழுது யூதர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள்தான் அந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களாவர். அவர்கள் காணாமற்போன இஸ்ரவேல் வீட்டார். அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளு வார்கள். அப்பொழுது மணவாட்டியான வள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பாள்.



# அந்த தீர்க்கதரிசிகள் காட்சியில் தோன்றும்வரை, இஸ்ரவேலர் ஒருபோதும் மனமாற்றமடைவதில்லை. புறஜாதி சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே அது சம்பவிக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0324E - ஏழாம் முத்திரை

121 இப்பொழுது இந்த யூதர்களைக் கவனியுங்கள். இப்பொழுது, குருடாக்கும் செதில்கள் இவர்கள் கண்களை மூடிக் கொண்டுள்ளன. அவர்கள், அவர்களால் அதை ஒன்றும் செய்ய முடியாது. அது தேவனால் அங்கு வைக்கப்பட்டுள்ளது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தீர்க்கதரிசி கள் வரவிருக்கும் காலம்வரை அது அவ்வாறே இருக்கும். நீங்கள் ஒருக்கால் அவர்களிடம் மிஷினரிமார்களை அனுப்ப லாம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அந்த தீர்க்கதரிசிகள் காட்சி யில் தோன்றும்வரை, இஸ்ரவேலர் ஒருபோதும் மனமாற்றமடைவதில்லை. புறஜாதி சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே அது சம்பவிக்கும்.

122 காளையின் காலத்தில், சிங்கத்தின் அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. காளையின் ஆவி புறப்பட்டுச் சென்றதாக தேவன் தம் வசனத்தில் கூறியுள்ளார். சீர்திருத்தக்காரரின் காலத்தில் மனிதன் புறப்பட்டுச் சென்றான். பாருங்கள்? நீங்கள்...

123 அந்தந்தக் காலத்துக்குரியவை களையே அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும். அவர்கள் இப்பொழுது குருடாக் கப்பட்டிருக்கின்றனர். அவ்வளவுதான். இப்பொழுது கவனியுங்கள்.

124 ஆனால் புறஜாதிகளின் காலம் முடிவடையும் ஒரு சமயம் வரும். ஒரு மரமுண்டு, அதன் வேர்கள் யூதர்களாகும். அந்த மரம் வெட்டப்பட்டு, அதில் "காட்டொலிவ மரமாகிய" புறஜாதிகள் ஒட்டவைக்கப்பட்டனர். அது இப்பொழுது கனி கொடுத்துக்கொண்டு வருகின்றது.

நான் இப்பொழுது பேசிக்கொண்டிருந்த மணவாட்டி மரமாகிய புறஜாதி மணவாட்டி முறிக்கப்பட்டு தேவனுடைய சமூகத்திற்கு எடுக்கப்பட்ட பின்னர், அவிசுவாசமுள்ள புறஜாதிகளை (உறங்கிக் கொண்டிருக்கிற கன்னிகைகளை) நிர்மூல மாக்கி, மறுபடியும் யூதர்களை அவர் ஒட்டுப் போடுவார். அவ்விதம் செய்யப் போவதாக அவர் வாக்குத்தத்தம் செய் துள்ளார்.

125 அந்தக் காலம் வரை நீங்கள் எங்கு இருக்க வேண்டுமென்று...நீங்கள் இப்பொ ழுது எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்திருந்தால் நலம். நீங்கள் அதை அறிந்திருக்கவில்லையென் றால், அப்பொழுது நீங்கள் இருளில் தடுமாறிக் கொண்டிருக்கின்றீர்கள்.

126 இப்பொழுது, அக்காலத்தில்தான் யூதர்கள் மனம் திரும்புவார்கள். இப்பொ

ழுது, சபை காலத்தைப்போல, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் அபிஷேகத்தின் மூலம், அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் இப்பொழுது புறஜாதிகளின் காலம் நடந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில், அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இப்பொழுது வெளிப்படுத்தல் 11-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இரண்டு தீர்க்கதரிசிகளும் எத்தகைய செய்தியை பிரசங்கிப்பார்கள் என்று இப்பொழுது நாம் பார்க்கலாம். அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத் தெளிவாக நாம் காணலாம். முன் குறிக்கப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்—இஸ்ரவேலில் மீதியானவர்கள்—தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள்.

# 1,44,000 பேர்கள், அவர்கள் முன் குறிக்கப்பட்டவர்களா?

ஆம் ஐயா! அவர்கள் இஸ்ரவேலர், ஆவிக்குரிய இஸ்ரவேலர்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

120 இப்பொழுது ஆம், எல்லா யூதர்களும் இரட்சிக்கப்பட மாட்டார்கள். இல்லை, ஐயா! எல்லோரும் இரட்சிக்கப் படமாட்டார்கள். அவன் யூதர்களைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறான். யூதர் கள் என்பது அவர்கள் எருசலேமை விட்டு வெளியே போனபோது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பெயராகும். நெபுகாத் நேச்சார் அவர்களை அவ்விதம் அழைத் தான் என்று நான் நினைக்கிறேன். யூதா கோத்திரத்தார் அப்பொழுது கொண்டு போகப்பட்டதால் முதலில் "யூதர்கள்" என்னும் பெயர் அவர்களுக்கு கொடுக்கப் பட்டது. இப்பொழுது அவர்கள் யூதேயா விலிருந்து வந்ததினால் அவர்களுக்கு

யூதர்கள் என்னும் பெயர் கொடுக்கப் பட்டது.

121 ஆனால், இப்பொழுது இஸ்ரவேல் என்பது வித்தியாசமானதாகும். இஸ்ரவேல், யூதர்கள் என்னும் பெயர்கள் முற்றிலும் வித்தியாசமானவைகள். ஒவ்வொரு யூதனும் ஒரு இஸ்ரவேலன் அல்ல என்பதை கவனிக்கவும். இல்லை, அவன் ஒரு வெறும் யூதன்...“எல்லா யூதர்களும் இரட்சிக்கப்படுவார்கள்” என்று பவுல் ஒருபோதும் கூறவில்லை. அவன், “எல்லா இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்படுவார்கள்” என்று கூறினான். ஏன்? ஆதியிலிருந்து இஸ்ரவேல் என்பது மீட்புக்குரிய பெயராகும். பாருங்கள். எல்லா இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்படுவார்கள். ஆனால் எல்லா யூதர்களும் இரட்சிக்கப் படுவதில்லை. பாருங்கள்.

122 ஆயிரமாயிரமான புறஜாதியின் மக்கள் லட்சக்கணக்கான ஸ்தாபன சபை களில் இருந்து கொண்டே தங்களை “கிறிஸ்தவர்கள் என்றும், கிறிஸ்துவின் சபையென்றும்” அழைத்துக் கொள்கிறார் கள். இது ஒன்றுமே கிடையாது. இல்லை...இது, அவர்கள் இரட்சிக்கப் படுவார்கள் என்பதல்ல.

“நீங்கள் *இந்த* ஸ்தாபனத்தையோ அல்லது *அந்த* ஸ்தாபனத்தையோ அல்லது ஏதாகிலும் ஒரு ஸ்தாபனத்தையோ சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய பெயர் எங்களுடைய புத்தகத்தில் இல்லையென்றால் நீங்கள் இழக்கப்பட்டவர்கள்” என்று மக்கள் கூறுகிறார்கள். அதுதான் வெறித்தனமான ஸ்தாபன கோட்பாட்டு முறை. புரிகிறதா? அது வெறித்தனமான ஸ்தாபன கோட் பாட்டு முறை, பாருங்கள்?

123 நீங்கள் இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் உண்டு. “அது விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்.” தேவன், தம்முடைய முன்னறிவினால் தம்முடைய மகிமைக்கென்று ஒரு சபையை முன் குறித்தார். அவர்கள்தான் இரட்சிக்கப்படுவார்கள். இதுதான் சரியான காரியம். இப்பொழுது உன்னுடைய விசுவாசம் அங்கேதான் நங்கூரமிடப்பட்டிருக்கின்றது.

124 “என்னுடைய விசுவாசம் அங்கே நங்கூரமிடப்பட்டிருக்கிறது” என்று நீ கூறலாம். ஆனால், நீ எவ்விதம் ஜீவித்துக் கொண்டிருக்கிறாய் என்பதைப் பார். நீ அதற்கு தகுதியற்றவன் என்று காட்டுகிறது என்பதை நீயே காண்பாய். உன்னுடைய நங்கூரம் தவறானதாக இருக்கிறது. அது, கற்பாறையின் மீது நங்கூரமிடப்படாமல் மணலின்மீது போடப்பட்டிருக்கிறது. ஒரு

சிறு அலை அதை தூரே எறிந்துவிடும். ஊ—ஊ.

125 வார்த்தையானது ஏதோ ஒரு காரியத்தை வெளிப்படுத்தப்படும்போது, "என்னுடைய சபை அதை போதிப்ப தில்லை!" என்று கூறுவாயானால், உன்னு டைய நங்கூரம் பாறையின்மீது போடப் படாமல் மணலின்மீது போடப்பட்டிருக் கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. ஊ...ஊ...அது உண்மையே. ஆகவே, இப்பொழுது நீங்கள் அதைக் காண்கி றீர்கள்.

**1,44,000 பேர்கள், அவர்கள் முன் குறிக்கப்பட்டவர்களா?**

126 ஆம் ஐயா! அவர்கள் இஸ்ர வேலர், ஆவிக்குரிய இஸ்ரவேலர்.

127 அங்கே லட்சக்கணக்கான மக்கள் இருப்பார்கள் என்பதை நினைவுகூறுங்கள்.

இப்பொழுது எத்தனைப்பேர் அங்கே இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஒரு முழு கூட்டமே என்று நான் யூகிக் கிறேன். ஆனால் அவர்கள் யூதேயாவில் இருப்பதினாலேயே எல்லரும் இரட்சிக்கப் படுவதில்லை. பாருங்கள்?

இப்பொழுது, எத்தனைப்பேர் அங்கிருக் கிறார்கள் என்பதைக் குறித்து ஒரு எண்ணம் உண்டா? எனக்கு தெரியாது. ஆனால் அடுத்த உபத்திரவம் துவங்கு வதற்கு முன்பு...ஒருவேளை பெருக்கக் கூடும்...

## 63-0324M - முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

Rev. William Marrion Branham

# சகோதரன் பிரான்ஹாமே, கடைசி மூன்றரை வருடங்களில் ரோமாபுரியானது யூதர்களின் அரசாங்கத்தை எடுத்துக்கொள்ளும் என்று கூறினீர்கள். அது...உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரை வருடங்களா அல்லது கடைசி மூன்றரை வருடங்களா? இது சரியா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

217. **சகோதரன் பிரான்ஹாமே, கடைசி மூன்றரை வருடங்களில் ரோமாபுரியானது யூதர்களின் அரசாங்கத்தை எடுத்துக்கொள் ளும் என்று கூறினீர்கள். அது**...**உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரை வருடங்களா அல்லது கடைசி மூன்றரை வருடங்களா? இது சரியா?**

369 அது கடைசி மூன்றரை வருடங் களே, அது சரிதான், முதல் மூன்றரை வருடங்களல்ல, ஏனென்றால் அது ஏற்கனவே கடந்து விட்டது.

## 63-0324M – முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்

Rev. William Marrion Branham

# நாம் முடிவின் நேரத்தில் இருக்கிறோம்





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-0417 - கர்த்தருடைய இரண்டாம் வருகை

44 இப்பொழுது இயேசு, “நீங்கள் அத்திமரம் துளிர்விடுகிறதைக் காணும் போது” என்று கூறுகிறார். இப்பொழுது, யூதர்கள் உலகம் முழுவதிலும் சிதறடிக் கப்பட்டு, அதிக எண்ணிக்கைக் கொண்ட வர்களாக, இலட்சக்கணக்கானோர் ஜெர் மனியிலும், இத்தாலியிலும், ஐக்கிய நாடுகளிலும் மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து வருகின்றனர். தேவன், அவர் ஆரம்ப நாட்களில் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினதுபோல, அவர் முசோலியினுடைய இருதயத்தை யூதர்களின் மேல் கடினப்படுத்தினார். அப்பொழுது யூதர்கள் இத்தாலியிலிருந்து வெளியே விரட்டப்பட்டனர். அவர் ஹிட்ல ருடைய இருதயத்தை கடினப்படுத்தினார்.

அப்பொழுது அவர்கள் ஜெர்மனியி லிருந்து வெளியே விரட்டப்பட்டனர். அவர் ஸ்டாலினுடைய இருதயத்தை கடினப்படுத்தினார். அப்பொழுது அவர் கள் ரஷ்யாவிலிருந்து வெளியே விரட்டப் பட்டனர்.

45 ஐக்கிய நாடுகளாகிய நாம் அரபி யர்களின் பட்சத்தில் சார்ந்து கொண்டோம் என்று செய்தித்தாள் பிரசுரித்துள்ளதை கவனித்தீர்களா? ஓ, சகோதரனே, சுவற்றின் மேல் கையெழுத்துள்ளதே! தேவனோ, “இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர் வதிக்கப்படுவான், இஸ்ரவேலை சபிக்கிற வன் சபிக்கப்படுவான்” என்று கூறினாரே.

46 இப்பொழுது நான் ஒரு திரைப் படத்தை வீட்டில் வைத்திருக்கிறேன், இல்லை அது அந்த நேரத்தில் வாடைக்கு வாங்கப்பட்டது என்றே நான் நினைக்கி றேன். “அது நள்ளிரவிற்கு முன்னர் மூன்று நிமிடங்கள்” என்று விஞ்ஞானிகளால்

பெயரிடப்பட்டது. விஞ்ஞான உலகமோ, “நள்ளிரவிற்கு மூன்று நிமிடங்கள் ஆகும் அளவிற்கு நேரம் கடந்து விட்டது” என்று கூறியுள்ளது. அவர்கள் ஜலவாயு (Hydrogen) அல்லது பிராண வாயு, (Oxyjen) அணுசக்தி மற்றும் அந்த மகத் தான சக்தி வாய்ந்தவைகளை பயன்படுத்தி ஐந்தே நிமிடங்களில் முழுமையாக அழித்து ஒழிக்கக்கூடியவைகளைக் கண்டு பிடித்தபோது, அவர்கள் அதை நள்ளிர விற்கு முன் ஒரு நிமிடம் என்றாகு மளவிற்கு குறைத்துவிட்டனர் என்றே நான் கருதுகிறேன். இன்றிரவே அவர்களால் வட அமெரிக்காவின் முழு கண்டத்திலும் முப்பதே நிமிடங்களில் ஒரு நபர்கூட உயிரோடிராதபடிக்கு செய்யக்கூடும். அது நம்மை வெறுக்கிற ஒரு கூட்ட மத நம்பிக்கையற்றவர்களின் கரங்களில் இருந்து கொண்டிருக்கிறது. அது மட்டு மின்றி நாம் எல்லா இடத்தைச் சுற்றிலும் அகன்ற படகுகளையும், கப்பல்களையும்

நிறுத்திவைத்துள்ளோம்....சைபீரியா, ஹங்கேரி மற்றும் பல்வேறுபட்ட இடங்களில் உள்ள நம்முடைய கப்பல்களிலும் அதே மாதிரியான ஏவுகணைகள் நிரப்பப்பட்டு, அங்கே நின்று கொண்டிருக்கின்றன.

47 சகோதரர்கள், அது நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலம் கடந்ததாகவே உள்ளது. சோதோம் கொமோராவினர் தங்களுடையக் கடைசி நேரத்தில் ஜீவித்துக் கொண்டிருந்தனர் என்பதை அன்றிரவு அறியாமலிருந்தனர். முன்னறிவிக்கப்பட்டிருந்த சங்காரத் தூதன் வரவிருந்த அந்த இரவை எகிப்தியர் அறியாதிருந்தனர். பியர்ல் துறைமுகம் என்ற இடத்தில் நடைபெற்ற அந்தத் தாக்குதலை அறியாதிருந்தோம். நாமோ தராசிலே நிறுத்தப்பட்டு குறைக்காணப்பட்டிருக்கிறோமே! நாம் முடிவு நேர நெருக்கத்தில் இருக்கிறோமே!

48 என்ன சம்பவிக்கும்...அவர்கள் சரியாக மாஸ்கோவிலிருந்து அந்த ஏவு கணைகளை வீசக்கூடுமானால், தொலை நிலை இயக்கமானியின் மூலம் இயக்கி, லூயிவில்லிலுள்ள நான்காம் தெருவிற்குச் சரியாக அந்த அணுகுண்டை அந்தத் தேசத்திற்கு வீசவேண்டும் என்று அவர்கள் விரும்பினால் வீசலாம். அது உண்மை. நாம் எங்கோச் சமுத்திரத்தில் உள்ள நம்முடைய கப்பல்களில் நின்று மாஸ்கோ வின் தலைநகரத்திற்கு நாம் ஏவுகனைகளை நேரடியாக எறியவேண்டுமானாலும் எறிய முடியும். என் சகோதரனே, அந்த மகத்தான ஏவுகணை நிலை குலைவை ஏற்படுத்து மானால் இந்தத் தேசம் ஓர் அதிர்வையே பெற்றுக்கொள்ளும். அதே நேரத்தில் நாமும் அவ்வாறு அதே காரியங்களின் மூலம் அப்புறத்தில் அவர்களை நிலை குலையச் செய்து அதை அதிரச் செய் வதால் என்ன சம்பவிக்கும்? நாம் ஒரு சிறிய, மிகச்சிறிய மெல்லிய மேற்பரப்

பினைக் கொண்ட பகுதியின் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பூமியதிர்ச் சிகள் இப்பூமியைச் சுற்றி சுற்றி அரித்து அது ஒரு முட்டையின் மேலோட்டைப் போன்று காணப்படுகிறது. எனவே அது ஒரு முறை பெரிய அளவில் வெடிக்குமே யானால், இந்த எட்டாயிரம் மைல்கள் ஆழத்தில் உள்ள அடர்ந்த எரிமலைக் குழம்புகள் ஆகாயத்திற்கு பீறிட்டுத் தெறிக்கும். அப்பொழுது தேவன் என்ன சம்பவிக்கும் என்று கூறினாரோ சரியாக அதுவே சம்பவிக்கும்.

49 நாம் முடிவின் நேரத்தில் இருக்கி றோம். நாம் இங்கே தான் இருக்கிறோம். அதைத் தடுக்க வழியே கிடையாது. எல்லோரும் கெஞ்சினாலும்... நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐசன்ஹோவர் அவர்களை நியமிக்கலாம். ஆனால் அது இதனை ஒருபோதும் தடுத்து நிறுத்தாது. இயேசு கிறிஸ்து இந்த நேரங்கள் வரும்

என்று கூறினார். நாம் இங்குதான் இருக்கிறோம். அத்திமரம் தன்னுடையத் துளிரை விடுகிறது.

50 நீங்கள் லுக் (Look) என்ற பத்திரிக் கையை வாசிப்பீர்களேயானால், எப்படி அவர்கள் பெரிய ஆகாய விமானங்களை ஈரானுக்குக் கொண்டுச் சென்று, அங்கி ருந்து இந்த யூதர்களை கூட்டமாக ஏற்றிக் கொண்டு வந்தனர் என்பதை அப்புத்த கத்தில் உள்ள புகைப்படத்தில் காணலாம். அங்கே அவர்களில் ஆயிரக் கணக்கா னோர் பாபிலோனுக்கு கொண்டுச் செல்லப் பட்டது முதற்கொண்டு இரண்டாயிரத் தைநூறு ஆண்டுகளாக அங்கேயே விடப் பட்டிருந்தனர். அவர்கள் மரத்தாலான பண்டைய கருவிகளைக் கொண்டே உழுது கொண்டிருந்தனர். அவர்கள் இயேசுவான வர் பூமியின் மேலிருந்ததைக் குறித்தும்கூட ஒன்றுமே அறியாதிருந்தனர். அவர்கள் தங்களுடைய பண்டைய யூத பாரம்பரியத்

தைத் தவிர, அவர்கள் வாழ்ந்துவந்த பாரம்பரியங்களைத் தவிர, வேறெந்த காரியத்தைக் குறித்தும் ஒன்றுமே அறியா திருந்தனர். இந்த ஆகாய விமானங்கள் அங்கு கீழே சென்று அவர்களை தாய் நாட்டிற்கு திரும்பக் கொண்டு செல்லும்படி இந்த யூதர்களை ஏற்றத் துவங்கின போதோ...

51 தீர்க்கதரிசியோ, "அவர்கள் அந்த சிறையிருப்பிலிருந்து வெளியே வரும் போது, தேவன் அவர்களைக் கழுகின் செட்டைகளின் மேல் கொண்டு வருவார்" என்று இரண்டாயிரத்து எண்ணூறு அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனம் உரைத்துள்ளான். அந்த தீர்க்கதரிசி ஆகாய விமானம் வருவதைக் கண்டான். அவன் அவர்கள் அதில் அமர்ந்திருப்பதையும், அது அவர்களை ஏற்றிகொண்டு மீண்டும் அவர்களைத் தாய்நாட்டிற்கே கொண்டுச் செல்வதையும்

கண்டான். ஆனால் அதை என்னவென்று அழைப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. எனவே அவன் வெறுமனே... அதுவே அவனுக்குக் கழுகைப் போன்று காணப்பட்டது. எனவே அவன், “அவர்கள் கழுகின் செட்டைகளின் மேல் திரும்ப கொண்டு செல்லப்படுவார்கள்” என்றான்.

52 அவர்கள் அந்த ஆகாய விமானத்திலிருந்து இறங்கினபோது, வாலிபர், வயோதிபர்களுக்கு உதவி செய்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்கள் நேர்முகப்பேட்டி காணப்பட்டனர். அப்பேட்டியாளர்கள், “நீங்கள் மரிக்கும்படியாக தாய் நாட்டிற்கு திரும்பி வந்திருக்கிறீர்களா?” என்று கேட்டனர்.

அதற்கு அவர்கள், “இல்லை நாங்கள் மேசியாவைக் காணும்படிக்கே திரும்பி வந்துள்ளோம்” என்று பதிலுரைத்தனர்.

53 ஓ, பெரிதான நீராவிக்கப்பல்கள் கடந்த சில வருடங்களாக உலகத்தைச் சுற்றிலுமிருந்து, வாலிப மற்றும் வயோதிப யூதர்களையும் ஏற்றிக்கொண்டு வந்துள்ளன. அவர்கள் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும்போது தங்களுடைய ஆடைகளையே அணிந்திருந்தனர். எருசலேமின் தலைநகரத்தின் மேல் உலகத்திலேயே மிகப்பழமையான தாவீதின் ஆறுமுனை நட்சத்திரக்கொடி பறக்க, அது இன்றிரவு ஒரு தேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திமரமானது தன்னுடைய துளிர்களை விட்டுக் கொண்டிருக்கிறது.

எருசலேம் வளர்ந்து கொண்டிருக்கிறது,

கர்த்தர், திரும்ப அளித்துக் கொண்டிருக்கிறார்.

இவை தீர்க்கதரிசி முன்னுரைத்த அடையாளங்களாகும்;

புறஜாதியாரின் நாட்கள் எண்ணப் பட்டு, பயங்கரங்களால் நிறைந்துள்ளன;

ஓ, சிதறுண்டோரே, உங்களுடைய சொந்தத்திற்குத் திரும்புங்கள். மீட்பின் நாள் சமீபமாயிருக்கிறது.

மனுஷருடைய இருதயங்கள் பயத்தால் சோர்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

தேவனுடைய ஆவியினால் நிரப்பப் பட்டு, உங்களுடைய தீவட்டிகளைச் சீர்ப் படுத்திச் சரிசெய்யுங்கள்.

மேல் நோக்கிப் பாருங்கள்! உங்க ளுடைய மீட்பு சமீபமாயிருக்கிறது.

## 57-0417 – கர்த்தருடைய இரண்டாம் வருகை

Rev. William Marrion Branham

**ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; இஸ்ரவேல்; தங்கள் சுயதேசத்தை விட்டு வெளியேறியிருக்கையில், அவர்கள் இரட்சிக்கப்படுவதேயில்லை. இப்பொழுது அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளிலே முழு தேசமாக அவர்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள், வேதம் அவ்வாறு கூறுகிறது.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-07-30 M தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள் #1

121. இதை நீங்கள் மனதில் கொள்ளுங்கள். ஆகவே நீங்கள் இதைக் காணுங்கள். இஸ்ரவேல் நாட்டிற்கு யூதர்கள் போகிற வரையிலும் தேவன் அவர்களோடு இடைபடவே மாட்டார்.

122. இஸ்ரவேலுக்குப் போவதைக் குறித்து பேசிக்கொண்டு இங்கே ஒரு சகோதரன் உட்கார்ந்துகொண்டிருக்கிறார், அவருக்கு நான் இதைத் தான் கூற முயற்சிக்கிறேன். இஸ்ரவேலை விட்டு விலகியிருங்கள்! யூதர்களை மனந்திரும்பச் செய்து குணப்படுத்த வேண்டும் என்று பேசுகிறவர்களே, நீங்கள் யாவரும் அவர்களை விட்டு அகன்று விடுங்கள்.

இந்த செய்தியானது முடிவடையும் முன்னர், ஒரே இராத்திரியில் வார்த்தை யாலும் ஆவியாலும் இஸ்ரவேல் முழு ஜாதியாராக இரட்சிக்கப்படுவார்கள் என் பதை நீங்கள் காண்பீர்கள்; இது **கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்** என்பதாக இருக்கிறது. வேதம் அவ்வாறே கூறுகிறது. ஆனால் சுவிசேஷமானது அவர்களுக்கு கூட இல்லை.

அங்கே அவர்களுக்குள் சில மதம் மாறுபவர்கள் யூத சமயத்தை விட்டு வெளியேறி வந்து இரட்சிக்கப்படுகிறார் கள். அது உண்மைதான். என் முழு இரு தயத்தோடு நான் அதை விசுவாசிக்கிறேன்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; இஸ்ரவேல்; தங்கள் சுயதேசத்தை விட்டு வெளியேறியிருக்கையில், அவர்கள் இரட்சிக்கப்படுவதேயில்லை. இப்பொழுது அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாளிலே முழு தேசமாக அவர்கள் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள், வேதம் அவ்வாறு கூறுகிறது.

ஒரு நாளானது இஸ்ரவேலர் எல்லோரையும் முழுவதுமாக தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வரும்.

அப்படிப்பட்டதான மகத்தான காரியம் இந்நாட்களில் ஒன்றில் இஸ்ரவேலை சந்திக்கும்.

அது அத்தேசம் முழுமையையும் அசைக்கும்.

“ஒரே நாளில் நீர் இதைச் செய்தீர்” என்று தீர்க்கதரிசி முழக்கமிட்டான். ஒரே நாளில் அவர்கள் அதைக் காண்பார்கள்.

123. மகத்துவமுள்ள காரியம் அங்கே உண்டாயிருக்கும். எனது கருத்து என்னவெனில், அவர்களுக்கென ஒரு மகத்தான தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு முன்பாக

எழும்பி நின்று, மேசியா இன்னும் ஜீவிக்கிறார் என்றும் அவர்கள் புறக்கணித்த மேசியா வந்திருக்கிறார் என்று நிரூபிப்பான். ஏனெனில்...

124. அவர்கள் இப்பொழுது இஸ்ரவேல் பைபிள் என்ற அந்த சிறிய வேதாகமத்திலிருந்து வாசித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அதை பின்னாலிருந்து முன்நோக்கி வாசிக்கிறவர்கள், அது யூத மொழியில் எழுதப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். லேவி பெத்ரூஸ் என்பவர் அவர்களுக்கு 10 லட்சம் வேதாகமங்களை அனுப்பி வைத்தார். அவர்கள் அதைப் படித்து விட்டு, “இந்த இயேசுவானவர்...” அந்த யூதர்களெல்லாம் ஈரான் நாட்டிலிருந்து அங்கே கொண்டு வரப்பட்டவர்களாகும். அவர்கள் மேசியா என்றொரு காரியத் தைக் குறித்தே ஒருபோதும் கேள்விப்பட்டிராதவர்கள் ஆவர். அவர்கள்

தங்கள் சுயதேசத்திற்கு புறப்பட ஆயத்த மாகையில், அவர்களுக்கென வந்த ஆகாய விமானங்களில் ஏற மறுத்து விட்டனர். அவர்கள் இன்னமும் பழைய கலப்பையை வைத்துத் தான் உழுது கொண்டிருந்தனர். அதைப் பற்றி 'லுக்" என்ற பத்திரிக்கையில் படித்திருக்கிறீர்கள். எத்தனை பேர்கள் அதைப் பற்றிய கட்டுரைகளை 'லுக்' (Look) 'டைம்' (Time) ஆகிய பத்திரிகைகளில் படித்தீர்கள்? அவர்கள் விமானங்களில் ஏற மாட்டோம் என்றார்கள். அந்த வயது சென்ற அவர்களுடைய ரபீ அங்கே நின்று, "நாம் நம்முடைய சுயதேசத்திற்கு கழுகின் செட்டைகளில் கொண்டு செல்லப்படு வோம் என்று நம்முடைய தீர்க்கதரிசி கூறுயிருக்கிறதை நினைவில் கொள்ளுங் கள்" என்று கூறினார்.

தேசங்கள் உடைகின்றன; இஸ்ரவேல் விழித்தெழுகிறது வேதம் முன்னுரைத்த அடையாளங்கள் இவைகள் புறஜாதி

நாட்கள் எண்ணப்படுகின்றன அச்சங்கள் நிரம்பியுள்ளன சிதறியவரே உமக்குச் சொந்தமானதிற்கு திரும்பிடுவீர்

125. நீங்கள் விழித்துக்கொண்டு விடுவது நல்லது. நீங்கள் அதைப்பற்றி திரும்ப திரும்ப திரும்பக் கேட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்; ஆனால் இந்நாட் களில் ஒன்றில் இனிமேல் கேட்க முடியாதபடி அது கடைசி வேளையாக இருக்கப்போகிறது.

126. இஸ்ரவேல் தன் சுயதேசத்திற்குத் திரும்பிக்கொண்டிருக் கிறது. தேவன் எந்த நாளில் இஸ்ரவேலை ஒரு தேசமாகத் தீர்மானிக்கிறாரோ, அந்த நாள் முதற் கொண்டு தான் வேறெந்த வொரு புறஜாதி யானும் இரட்சிக்கப்படமாட்டான்.

**சபை எடுக்கப்பட்ட பின்னர், ரோமபுரியும் யூதரும் ஒருவரோடொருவர் உடன்படிக்கை செய்து கொள்வர். பரிசுத்த ஜனங்களோடு அவர்கள் உடன்படிக்கை செய்வார்களென்று வேதம் கூறுகிறது.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0318 – முதலாம் முத்திரை

338 இப்பொழுது, ஓ, இப்பொழுது, அன்றைக்கு நான் யாரோ ஒருவரிடம் இங்கே பேசிக்கொண்டிருந்தேன். அது சகோதரன் ராபர்ஸன் அல்லது யாரோ ஒருவரிடத்தில் இதைக் குறித்து பேசிக் கொண்டிருந்தேன். இங்கே இதைக் குறித்து அல்ல, ஆனால் கிட்டதட்ட இதேக் காரியம்தான். அதைப்பற்றி நான் சிறிது காலம் முன்பு இங்கே உங்களிடையே இந்த பொருளாதார நிலையின் பேரில் இந்த ஐக்கிய நாடுகளுக்கு என்ன சம்ப விக்கும் என்று பிரசங்கித்திருக்கிறேன் என்று நம்புகிறேன். பாருங்கள்? நாம் நமது கடன்களை, வரிப்பணத்தைக் கொண்டு அடைத்து வருகிறோம். கடன் அடைத்துத் தீர்க்க இன்னும் நாற்பது வருடங்கள்

செல்லும். நாம் அந்த அளவிற்கு பின் தங்கியுள்ளோம். நீங்கள் எப்போதாவது கெயர் (KATR) அல்லது லைப்லைன் (Life Line) வானொலி நிலையங்களில் அறி விப்பை வாஷிங்டனிலிருந்து வானொலி யில் கேட்டதுண்டா? நாம் பயங்கரமான நிலையில் உள்ளோம். அவ்வளவே.

339 அதற்கு என்ன காரணம்? தங்கம் எல்லாம் வங்கியில் செலுத்தப்பட்டு, அதற்குரிய பத்திரங்களை யூதர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர்...அது ரோமபுரியாயிருக்கப்போகின்றது. இப்பொழுது கவனியுங்கள், இந்தப் பெரிய மாடிக் கடைகள் (apartment stores...) யாருக்குச் சொந்தம் என்பதை நாம் அறிவோம். ஆனால் பெரும்பான்மையான உலகத்தின் செல்வம் ரோமபுரியின் வசமுள்ளது. எஞ்சியவை யூதர்களிடத்தில் இருக்கிறது. இப்பொழுது இதைக் கவனி யுங்கள். இப்பொழுது இதைக் கவனியுங்

கள். பரிசுத்த ஆவியானவர் இதை எனக்கு எவ்வாறு வெளிப்படுத்தினார் என்று பாருங்கள்.

*அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி* (இப்பொழுது கவனியுங்கள்) *அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்; அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும்.*

340 கவனியுங்கள்! ஓ! அது எவ்வாவு சாமார்த்தியமுள்ள காரியம்! அவன் இங்கே இருக்கிறான். இப்பொழுது அந்த காட்சி என்ன என்றும், இது ரோமாபுரி தான் என்று நாம் அறிந்து கொண்டோம். அவன் வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்பவன் என்று அறிந்தோம். அவன் ஒரு போதகமாகப் புறப்பட்டான்

என்று நாம் அறிவோம். அஞ்ஞான ரோம மார்க்கம், போப்பாண்டவரின் ரோமன் கத்தோலிக்க மார்க்கமாக மாறி, அதற்கு முடிசூட்டடப்பட்டது.

341 இப்பொழுது கவனியுங்கள்! "கடைசி காலத்தில்". கிறிஸ்து பிரசங்கித்த காலத்திலல்ல, ஆனால் "கடைசி காலத்தில்", வாரத்தின் பிற்பகுதியில், நாம் இப்பொழுது தானியேலின் எழுபது வாரங்களைக் குறித்து சிந்தித்தோம். கிறிஸ்து மூன்றரை வருடங்கள் தீர்க்க தரிசனம் உரைத்தார். இன்னமும் மூன்றரை வருடகாலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான் கூறுவது சரியா? [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] அச் சமயம் இந்த பிரபு தானியேலின் ஜனங் களுடன் அதாவது யூதர்களுடன் உடன் படிக்கை செய்வான்.

அது மணவாட்டி எடுக்கப்பட்ட பிறகு சம்பவிக்கும். அவள் அதைக் காண மாட்டாள்.

342 கவனியுங்கள், தானியேலின் வாரத்தின் பிற்பகுதியில், ஜனங்கள் ஒரு உடன்படிக்கை செய்கின்றனர். இந்த பிரபு ரோமாபுரியுடன் ஒரு உடன்படிக்கை செய்கிறான், அவர்களோடு ஒரு உடன் படிக்கை செய்கிறான். செல்வத்திற்காக என்பதில் சந்தேகமேயில்லை, ஏனெனில் கத்தோலிக்க மார்க்கத்தாரும், யூதர்களும் உலகத்தின் செல்வம் முழுமையுமே கைப் பற்றியுள்ளனர்.

343 நான் வாடிகனில் இருந்தபோது, அங்குள்ள மூன்று கிரீடங்களையும் கண் டேன். நான் போப்பாண்டவரை ஒரு புதன்கிழமை பகல் 3.00 மணிக்குப் பேட்டிக் காண பாரன் பான் ப்ளூம் பெர்க் (Baron von Blurnberg) ஒழுங்கு செய்திருந் தார்.

344 நான் ராஜாவிடம் அழைத்துச் செல்லப்பட்டபோது, என் கால் பட்டையிலுள்ள முன்கவசத்தை (cuffs) வெட்டிவிட்டார்கள். அது பரவாயில்லை. ஆனால் நான் அவரைக் கண்டு திரும்பி வரும் போது, என் முதுகைக் காண்பித்து வரக் கூடாதாம். அதுவும் பரவாயில்லை.

ஆனால், அந்த மனுஷனுக்கு முன்பாக நான் என்ன செய்ய வேண்டும்?" என்று நான் கேட்டேன்.

345 அப்பொழுது அவர்கள், "நல்லது, நீங்கள் உள்ளே சென்று முழங்காற்படியிட்டு, அவருடைய விரலை முத்தம் செய்யுங்கள்" என்று கூறினார்.

346 நான், "அது முடியாது. அது முடியாது. இல்லை, ஐயா," என்றேன். நான், "சகோதரன் என்று அழைக்கப்பட விரும்புகிறவர்களை நான் சகோதரன் என்று அழைப்பேன். சங்கை (Revend) என்னும் பட்டப்பெயரால் ஒருவன்

அழைக்கப்பட விரும்பினாலும் நான் அவனை சங்கை என்று அழைப்பேன். ஆனால் ஒரு மனிதனைப் பணிந்து ஆராதனை செய்யமாட்டேன். ஏனெனில் ஆராதனை யாவும் இயேசுகிறிஸ்துவுக்கே உரியது” என்று கூறினேன். பாருங்கள்? இல்லை, இல்லை, ஐயா. ஒரு மனிதன் கரத்தை முத்தம் செய்வது என்பது என்றால் முடியாது. ஆகவே, நான் அதைச் செய்யவில்லை.

347 ஆனால் வாடிகனை நான் சுற்றிப் பார்த்தேன். கோடி, கோடி, கோடிக்கணக் கான டாலர்கள் கொடுத்தாலும் அதை வாங்க முடியாது. நல்லது…“உலகத்தின் செல்வங்களை அனைத்தும் அவளிடத்தில் காணப்பட்டதென்று” வேதம் உரைக்கிறது. அதை சற்று சிந்தித்துப் பாருங்கள். ஓ, கோடிக் கணக்கான மடங்கு பெருமான முள்ள விலைமதிக்க முடியா அந்த பெரிய ஸ்தலங்களைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்…

348 ருஷியாவில் கம்யூனிஸம் ஏன் தலையெடுத்தது? இன்று அநேக போதகர் கள் கம்யூனிஸத்துக்கு விரோதமாய் பிரசங்கிப்பதைக் கேட்கும்போது எனக்கு வயிறு குமட்டுகிறது. அவர்கள் எதைக் குறித்து காக்கையைப் போன்று கரைந்து கொண்டிருக்கின்றனர் (crowing) என்பதை அறியாமல் உள்ளனர். அது சரி. கம்யூனிஸம் என்பது ஒன்றுமில்லை. அது இப்பூமியில் சிந்தப்பட்ட பரிசுத்தவான் களின் இரத்தத்திற்காக பழிவாங்குவதற் கென்று தேவன் உபயோகிக்கும் ஒரு கருவியாக உள்ளது. அது சரி.

349 சபை எடுக்கப்பட்ட பின்னர், ரோமபுரியும் யூதரும் ஒருவரோடொருவர் உடன்படிக்கை செய்து கொள்வர். பரிசுத்த ஜனங்களோடு அவர்கள் உடன்படிக்கை செய்வார்களென்று வேதம் கூறுகிறது. அவர்கள் அதை செய்வார்கள், (ஏன்) காரணம் இந்த தேசம் பொருளாதார

சீர்குலைவு அடையும் நிலை அடைந்து விட்டது. உலகத்தின் ஏனைய நாடுகளும் பொருளாதார சீர்குலைவை அடைந்து விட்டன. நீங்கள் அதை அறிவீர்கள். நம் கடனைத் தீர்க்க இன்னும் நாற்பது வருடகாலம் நம் வரிப்பணத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமானால், நமது நிலையென்ன?

350 நாணயங்களை வாங்கிக் கொண்டு பத்திரங்களைச் செலுத்துவதுதான் இதற்கு விமோசனம். நாம் அவ்வாறு செய்ய முடியாது. வால் ஸ்ட்ரீட் (Wall Street) தன் பணத்தையெல்லாம் சேமித்து வைத்துள் ளது. யூதர்கள்தான் வால் ஸ்ட்ரீடில் ஆதிக்கம் கொண்டுள்ளனர். அதன் எஞ்சிய பாகம் வாடிகனில் உள்ளது. அவர்கள் உலக வாணிபத்துறையில் ஈடுபட்டுள்ள னர். மீதியான செல்வம் அனைத்தும் வால் ஸ்ட்ரீட்டிலுள்ள யூதரிகளிடம் உள்ளது. நாம் அவ்வாறு செய்ய முடியாது.

351 ஆகவே அவர்கள் அதைச் செய்வார்களானால் நீங்கள் நினைக்கின் றீர்கள்...இப்படிப்பட்ட மதுபான மற்றும் புகையிலை வியாபாரிகள், வருடத்திற்கு கோடிக்கணக்கான டாலர்கள் சம்பாதித்து, பழைய ஆபாச புகைப்படங்களிலும், அதைப் போன்ற காரியங்களிலும் வருமானவரி ஏய்ப்பு செய்து விடுகிறார் கள். ஆகவே அங்கே அரிசோனாவிற்கு சென்று ஆயிரக்கணக்கான அல்லது இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கி ஐம்பதாயிரம் டாலர்களுக்கு பெரிய கிணறுகளை வெட்டி அதை வருமான வரியில் சேர்த்து கணக்கு காட்டி வரி ஏய்ப்பு செய்கின்றனர். நீங்கள் உங்கள் வரியை செலுத்தாவிட்டால் உங்களை சிறையில் தள்ளி விடுவார்கள். ஆனால் அவர்கள் வரி ஏய்ப்பு செய்து, கிணறுகளை வெட்டி, பிறகு நிலத்தை சமன்படுத்தும் கருவிகளை (bulldozers) கொண்டு வருகின்றனர். ஆகவே அவர்கள் என்ன

செய்வார்? தாங்கள் சம்பாதித்த பணத்தின் மூலம் அடுத்த காலகட்டத்தில் அங்கே வீடுகள் கட்டும் திட்டங்களைக் கொண்டு வருவர். அவர்கள் ஒரு முதலீட்டைச் செய்தாக வேண்டும். வீடுகள் கட்டும் திட்டங்களை அங்கே செயல்படுத்தி அவைகளை லட்சக்கணக்கான டாலர் களுக்கு விற்று விடுவார்கள். ஆகவே அப்படிப்பட்ட நபர்கள் பணத்தை மாற்று வதற்கு உடன்படுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

352 இந்த நபர் செய்ததுபோல...அவன் பெயர் என்ன? காஸ்ட்ரோ ஒரே ஒரு புத்தியுள்ள காரியத்தைச் செய்தான். அவன் பணத்தை திரும்பவும் அளித்து, பாண்டு பத்திரங்களைக் கிழித்துப்போட்டான்.

353 கவனியுங்கள், ஆனால் நம்மால் அதைச் செய்ய முடியாது. இந்த நபர்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள். ஐஸ்வரிய

முள்ள பூமியின் வர்த்தர்கள் அதை வைத்துள்ளனர்.

354 அப்படியானால் அதைச் செய்ய ஏதோ காரியம் மாத்திரமே உண்டு. கத்தோலிக்க சபை அவ்வாறு செய்ய முடியும். அவளிடம் மாத்திரமே போதிய பணம் உண்டு. அவர்களால் அதைச் செய்ய முடியும். அவள் அதை கண்டிப் பாக செய்வாள். அதற்கென்று அவள் அவன் யூதருடன் தன்னை ஒப்புரவு செய்து கொள்வாள். இந்த உடன்படிக்கை அவள் யூதருடன் செய்யும்போது...இப்பொழுது ஞாபகங் கொள்ளுங்கள். இதை நான் வேத ஆதாரம் கொண்டு சொல்லுகிறேன்...இந்த உடன்படிக்கையை அவள் செய்யும்போது, "அவன் *உபாயத்தினால்* கைக்கூடி வரப்பண்ணுவான்" என்று தானி 8:23,25 உரைக்கின்றது என்பதை நாம் கவனிக்க லாம். அவன் யூதர்களுடன் இந்த உடன் படிக்கையைச் செய்கிறான்.

355 ஆனால் யூதர்களின் செல்வம் அவன் கையில் சிக்கிக்கொண்ட பிறகு அந்த மூன்றரை வருடகாலத்தின் மத்தியில் அவன் உடன்படிக்கையை முறிக்கிறான். அவ்வாறு செய்யும்போது...ஓ...என்னே! ஓ...என்னே!

356 அவன் அந்திக்கிறிஸ்துவென்று முடிவுகாலம்வரை அழைக்கப்படுகிறான். ஏனெனில் அவனும் அவன் பிள்ளைகளும் கிறிஸ்துவுக்கும் அவர் வார்த்தைக்கும் விரோதமாய் இருக்கிறார்கள். அந்த மனிதன் அந்திகிறிஸ்து என்று அழைக்கப் படுகிறான்.

357 இப்பொழுது, அவன் பணத்தை உடையவனாய் இருக்கப் போகிறான். அது அங்கிருந்துதான் வரும் என்று நான் நினைக்கிறேன். ஒரு நிமிடம் மட்டும், நான் இதைக் கூறும்பொழுது, நான் இன்னும் ஒரு நிமிடத்தில் அதைக் குறித்து பின்நோக்கி செல்ல விரும்புகிறேன்.

358 அவன் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான். கடைசி காலம் வரையிலும் தேவனுடைய பார்வையில் அவன் அந்திக்கிறிஸ்து என்றே அழைக்கப் படுவான். இப்பொழுது, ஆனால் அவன் அப்பொழுது வேறொரு பெயரால் அழைக்கப்படுவான்.

359 இப்பொழுது, செல்வத்தில் ஆதிக்கம் அவன் கையில் வந்தவுடன் யூதர்களுடன் அவன் செய்த உடன்படிக் கையை அவன் எழுபதாவது வாரத்தின் பாதியின் மத்தியில் முறிப்பானென்று தானியேல் கூறுகிறான். அதன்பின், சகோதரனே, அவன் என்ன செய்வான். அச்சமயம், உலகத்தின் செல்வமனைத்தும் அவன் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுள் ளதால் உலகிலுள்ள வாணிபமெல்லாம் அவன் கைக்குள் இருக்கும். அந்த சமயத்தில் இரண்டு தீர்க்கதரிசிகள் காட்சியில் எழும்பி 1,44,000 பேரை அழைப்பர். அதன் பின்னர் என்ன

நேரிடும்? வெளிப்படுத்தின விசேஷம் 13-ல் கூறியுள்ள மிருகத்தின் முத்திரை போடப்படும். ஏனெனில் உலக வாணிப மெல்லாம் அவன் அதிகாரத்தில் இருக்கும். அதன்பின் என்ன சம்பவிக்கும்? “அந்த முத்திரையிடப்பட்டவன் அல்லது வேறு யாரும் விற்கவோ கொள்ளவோ முடி யாது”, என்ற மிருகத்தின் முத்திரை உள்ளே வரும். [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டினார்.—ஆசி.]

360 தேவனுக்கு ஸ்தோத்திரம். அவ் வமயம் சபையானது மகத்தான மூன்றரை வருடகாலம் மகிமையில் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். இது நிகழும்போது, நாம் இவ்வுலகில் இருக்க மாட்டோம்.

361 இப்பொழுது கவனியுங்கள்... சபைக்காலம் கடைசியில் அவன்... அவனும் அவள் பிள்ளைகளும் அந்திக் கிறிஸ்துவென அழைக்கப்படுகின்றனர்.

ஏனெனில் கிறிஸ்துவுக்கு விரோதமாயுள்ளவன் அந்திக்கிறிஸ்துவாவான். வார்த்தைக்கு விரோதமாயுள்ள எவனும் கிறிஸ்துவுக்கு விரோதமாயுள்ளான். ஏனெனில் கிறிஸ்துதான் வார்த்தை. இப்பொழுது அவன் அந்திக்கிறிஸ்துவாயிருக்கிறான்.

362 வெளிப்படுத்தின விசேஷம் 12:7-9ல் குற்றம் சாட்டுகிறவனாகிய சாத்தான் கீழே தள்ளப்படும்போது, நீங்கள் வேண்டுமானால் அதைக்குறித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதை படிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்பொழுது, நமக்கு நேரமில்லை. பத்து மணிக்கு இன்னும் 20 அல்லது 15 நிமிடங்கள் உள்ளன. பாருங்கள். “நம் சகோதரர் மேல் குற்றஞ்சாட்டுகிறவனாகிய”, “பிசாசாகிய” அந்த ஆவி, “சாத்தான்”, சபை எடுக்கப்பட்ட பின்னர் தாழத்தள்ளப்பட்டான் என்று வெளி 12:7-9 கூறுகின்றது. அது சரி.

363 சபை எடுக்கப்படும்போது, சாத்தான் தாழத்தள்ளப்படுகிறான். சபை மேலே போகும்போது, சாத்தான் கீழே வருகிறான், பின்பு அவன் அந்திக்கிறிஸ்து வுக்குள் வாசம் செய்து “மிருகம்” என்று அழைக்கப்படுகிறான். வெளிப்படுத்தின விசேஷம் 13-ல் அவன் மிருகத்தின் முத்திரையைப் போடுகிறான். பாருங்கள்?

364 “தடை செய்கிற அவனால்” மட்டுமே கிறிஸ்தவமானது தன் பரிசுத் தத்தில் இப்பொழுது பூமியின் மேல் விடப் பட்டுள்ளது, “தடைசெய்கிறவன்”.

365 “தேவனுடைய ஆலயத்தில் அவன் உட்கார்ந்து, தேவன் போல் தன்னைக் காண்பித்து, உலகில் மனித ருடைய பாவங்களை மன்னிப்பான்” என்று தெசலோனிக்கேயர் நிருபத்தில் கூறப்பட் டுள்ளதை நினைவில் கொள்ளுங்கள். அவன் வெளிப்படும் சமயம் வரும்வரை இது தொடர்ச்சியாக நடைபெற்று,

“அக்கிரமம் உலகில் மிகுதியாகும்”. காரணம் அதுவரை அது அறியப்படாது.

366 அப்பொழுது சபையானது எடுக்கப்படும். அது எடுக்கப்பட்ட பின்னர், அவன் இப்பொழுதுள்ள அந்திக்கிறிஸ்து விலிருந்து மாறுகிறான், ஓ, என்னே, “சபை, அந்த மகத்தான சபை”, அவன் அந்திக் கிறிஸ்துவினின்று மாறி “மிருகமென்று” அழைக்கப்படுகிறான். ஊ—ஊ இதை ஜனங்களுக்குப் புரிய வைக்க எனக்கு எத்தனை ஆவல்!

367 அந்திக்கிறிஸ்து என்பதும், மிருகம் என்பதும் ஒரே ஆவிதான் என்பதை ஞாபகங் கொள்ளுங்கள். அங்கே தரித்துவம் காணப்படுகிறது. ஆம், ஐயா. பிசாசின் வல்லமை மூன்று கட்டங்களில் வெளிப்படுகின்றது. நிக்கொலாய் ஆவி கிரீடம் சூட்டப்படுவதற்குமுன் அது மனிதனுக்குள் வாசம் செய்ய வேண்டும் என்பது நினைவிருக்கட்டும். பாருங்கள்?

இப்பொழுது இதைக் கவனியுங்கள்! மூன்று கட்டங்கள் முதலாவது கட்டத்தில் அவன் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான். இரண்டாவது கட்டத்தில் அவன் கள்ளத் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறான். மூன்றாவது கட்டத்தில் அவன் மிருகம் என்று அழைக்கப்படுகிறான்.

368 கவனியுங்கள், நிக்கொலாய் மதஸ்தரின் போதகம், அந்திக்கிறிஸ்துவின் போதகம், பவுலின் காலத்தில் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக எழும்பினது, அந்திக்கிறிஸ்து.

369 பின்பு அந்த போதகம் மனிதனானபோது கத்தோலிக்க சபையின் குருக்களாட்சி (heirerchy) யைக் குறித்து பிரசங்கிக்கும் தீர்க்கதரிசியாக அவன் விளங்குகிறான்—கள்ளத்தீர்க்கதரிசி. போப்பாண்டவர்தான் தவறான போதகத்துக்குத் தீர்க்கதரிசி, ஆகவே அதன் காரணமாக அவன் கள்ளத் தீர்க்கதரிசியாகிறான்.

370 மூன்றாம் கட்டத்தில் அவன் மிருகம் என்னும் பெயர் கொள்கிறான். அஞ்ஞான ரோமமார்க்கம் பெற்றிருந்த எல்லா வல்லமையும் ஒரு மனிதன் பெற்று முடிசூட்டப்படுகிறான். ஏனென்றால் ஏழு தலைகளுள்ள மிருகம்—வலுசர்ப்பம், பரலோகத்திலிருந்து தாழதள்ளப்பட்டு, இந்த கள்ள தீர்க்கதரிசிக்குள் வாசம் செய்கிறது. அந்த வலுசர்ப்பம் ஏழு தலை களில் ஏழு கிரீடங்களைச் சூடியிருந்தது அது பூமியிலும், சமுத்திரத்திலும் தள்ளப் படுகிறது. அது சரி.

## 63-0318 - முதலாம் முத்திரை

Rev. William Marrion Branham

# இஸ்ரவேல்

2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து